நம்பிக்கையின்
சின்னம்
அம்பிகா!

தரமான 22 கரட்
தங்க நகைகளைப்
பெற்றுக் கொள்ள
நம்பிக்கையான ஸ்தாபனம்
அம்பிகா
ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு,
கொழும்பு — 11.
தொலைபேசி: 22839 — 34238


# தினபதி

ரூ 2/=

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல. 4589 1984 ஜூன் 22 வெள்ளிக்கிழமை ★★★ தினபதி

சொந்த இதழாகப் பதிவு பெற்றது


அம்பிகா!
உங்களை
அழைக்கின்றாள்!

நவீன டிசைன்களில்
நங்கையர் மனதைக்
கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு

Ambiga
Jewellers
77, SEA STREET,
COLOMBO-11.
PHONE: 22839 — 34238.

# கொழும்பு பாடசாலைகள் எல்லாம் இன்று மூடப்படும்

## தலைநகரில் நேற்று நடந்த அசம்பாவிதங்களை அடுத்து நடவடிக்கை

### வன்செயலைத் தூண்டும் தீவிரவாதிகள் 15 பேர் இதுவரை கைது

கொழும்பு, ஜூன் 22

கொழும்பு மாநகர சபை எல்லைக்குள் இருக்கும் எல்லாப் பாடசாலைகளும் இன்று மூடப்பட்டு இருக்கும் என்று உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது. நேற்று கொழும்பில் நடந்த அசம்பாவித சம்பவங்களை அடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கிறது.

பாடசாலைகள் மூடப்பட்டு இருந்தாலும் ஆசிரியர்கள் பாடசாலைகளுக்குச் சமுகம் அளிக்க வேண்டும். இது கல்வி அமைச்சின் வேண்டுகோள். வருகிற திங்கட்கிழமை பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும். அன்று மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.



கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற அசம்பாவித சம்பவங்களின் போது ஹவ்லொக் வீதியில் எரிக்கப்பட்ட இ. போ. ச. பஸ்ஸை படத்தில் காணலாம்.

(த—ச)

## நோன்பு தொழுகை நேரம்

| | | |
|---|---|---|
| ஸஹர் முடிவு | — காலை | 4.20 |
| ஸுப்ஹு | — காலை | 4.35 |
| சூரிய உதயம் | — காலை | 5.55 |
| ளுஹர் | — பகல் | 12.20 |
| அஸர் | — பிற்பகல் | 3.40 |
| மஃரிபு | — மாலை | 6.28 |
| இஷா | — இரவு | 7.48 |

## அனுராதபுரத்தில் நாளை கொண்டாட்டம்

கொழும்பு, ஜூன் 22

கிராம எழுச்சி திட்ட ஆறாவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு, நாளை அநுராதபுரத்தில் கொண்டாட்டங்கள் நடைபெறுகின்றன.

உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சரும், பிரதமருமான திரு. ஆர். பிரேமதாச, சபாநாயகர் திரு. ஈ. எல். சேனநாயக்க ஆகியோர் இவ்விழா நிகழ்ச்சிகளை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைப்பார்கள்.

வண்ண ஊர்திகளின் அலங்கார ஊர்வலமும் நடைபெறும். (த—ய)

# செவ்விந்திய தலைவருடன் ஜனாதிபதி விருந்துண்டார்

கிழமை பாடசாலைகள் மீண்டும் திறக்கப்படும். அன்று மாணவர்கள் வகுப்புகளுக்குச் செல்ல வேண்டும் என்றும் கல்வி அமைச்சு அறிவித்திருக்கிறது.

இன்று கொழும்பைப் போலத் தங்காலை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளும் மூடப்பட்டு இருக்கும். கடந்த புதன்கிழமை பேராதனையில் நடைபெற்ற அசம்பாவித சம்பவத்தில் உயிரிழந்த பல்கலைக்கழக மாணவன் தங்காலையைச் சேர்ந்தவர். அவருக்கு அஞ்சலி செலுத்து முகமாகவே தங்காலை மாவட்டப் பாடசாலைகள் இன்று மூடப்பட்டு இருக்கும். என்று கல்விப் பணிப்பாளர் கே. எஸ். பாலிக்ககார அறிவித்திருக்கிறார்.

நேற்றுக் கொழும்பில் தீவிரவாதிகளின் தூண்டுதலின் பேரில் சில அசம்பாவிதங்கள் நடந்தன. பல்கலைக்கழக மாணவர்கள் குழு ஒன்று இ. போ. ச. பஸ் ஒன்றுக்குத் தீவைத்தது. கூட்டத்தைக் கலைக்கப் பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். ஒருவர் மரணமானார். மற்றொருவர் காயம் அடைந்தார். பொலீஸ்காரரர் ஒருவரும் காயத்துக்கு உள்ளானார்.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டிருக்கிறார். தீவிரவாதிகளும் வன்செயலைத் தூண்டுவோரும், மாணவர்களைத் தவறான வழியில் இட்டுச் செல்கின்றனர். இரத்தக் களரியும், உயிராபத்தும் சொத்துக்களுக்குச் சேதமும் ஏற்படுத்த அவர்கள் முயல்கின்றனர் என்று அவர் அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

தீவிரவாத சக்திகள் கொழும்பில் சில சம்பவங்களை உருவாக்குவதில் வெற்றியடைந்துள்ளன என்றும் ராஜாங்க அமைச்சின் செயலாளரின் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ராஜாங்க அமைச்சின் செயலாளர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:–

பேராதனை பல்கலைக்கழகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற சம்பவத்தை அடுத்து, பொதுமக்களின் ஒத்துழைப்

(2ஆம் பக்கம் பார்க்க)

காணலாம். (த-ச)

## காணமல் போன படங்களில் 2300 கிடைத்தன

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். பல்கலைக்கழகத்தில் இருந்து இரண்டு வாரங்களுக்கு முன் காணமல் போன 3000 பூகோளப் படங்களில் 2300 படங்கள் மீண்டும் கிடைத்திருக்கின்றன.

இந்தப் படங்கள் ஒரு சாக்கில் கட்டி பல்கலைக்கழக கேற்றுக்கு முன் போடப்பட்டிருந்தன. (உ-ந-120)

# ஜனாதிபதி விருந்துண்டார்

## சாந்தாபே நகரில் பெரும் வரவேற்பு

— வாஷிங்டனிலிருந்து இக்பால் அத்தாஸ் —

வாஷிங்டன், ஜூன் 21

வாஷிங்டன் விஜயத்தை முடித்துக் கொண்டு இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, நியூ மெக்சிக்கோ மாநிலத்திலுள்ள சாந்தாபே நகருக்குச் சென்றார். அங்கு செவ்விந்தியர்களின் தலைவர்களுடன் அவர் விருந்துண்டார்.

இங்கிருந்து ஜனாதிபதி தம்பதியர் புறப்பட்ட போது, அவர்களுக்குச் சிறப்பான பிரியாவிடை அளிக்கப்பட்டது.

அமெரிக்க ராஜாங்க அமைச்சர் ஜோர்ஜ் சூல்ட்ஸ் உட்பட பல ராஜாங்க அமைச்சு அதிகாரிகள் குழுமி நின்று, ஜனாதிபதி தம்பதியரை வழியனுப்பி வைத்தனர்.

சாந்தாபே விமான நிலையத்தில் மாநகர மேயர் லூயிஸ் மொன்டானோ மற்றும் கலாசார அமைச்சு அதிகாரிகளால் வரவேற்கப்பட்டனர்.

பின்னர் சான்டா டொமிங்கோ சென்று அங்குள்ள செவ்விந்தியர்களின் இருப்பிடங்களைப் பார்வையிட்டனர்.

ஜனாதிபதி தம்பதியர் பின்னர் செவ்விந்தியத் தலைவர்களுடன் பகற்போசனம் அருந்தினர்.

இன்று ஜனாதிபதி தம்பதியர் நியூயோர்க் வந்து சேர்வர் (க)

## தேயிலை விலை வீழ்ச்சி

லண்டன், ஜூன் 21

உலக சந்தையில் தேயிலை விலையில் பெரும் வீழ்ச்சி ஏற்பட்டிருக்கிறது.

கடந்த 7 மாத காலத்தில் தேயிலைக்கு இவ்வாரமே லண்டன் சந்தையில் ஆகக் குறைந்த விலை கிடைத்துள்ளது. (ந)

# மாணவர் மரணம் குறித்து

# பாரபட்சமற்ற விசாரணை

## அமைச்சர் லலித் வாக்குறுதி

கொழும்பு, ஜூன் 22

பேராதனை பல்கலைக்கழகத்தில் மாணவர் ஒருவர் மரணமாக நேர்ந்த அசம்பாவித சம்பவம் குறித்து அரசாங்கம் பாரபட்சமற்ற விசாரணை நடத்தும் என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி உறுதியளித்தார்.

இந்தச் சம்பவத்தை முன் வைத்து வன்செயல்களைத் தூண்டி விட சில தீவிரவாதக் குழுக்கள் முயலுகின்றன. வாகனம் ஒன்று புதனன்று தீக்கிரையாக்கப்பட்டது. பாடசாலை மாணவர்கள் குழப்பம் செய்யத் தூண்டப்பட்டிருக்கிறார்கள், என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

பேராதனை பல்கலைக் கழகத்தில் புதனன்று நடந்த ஒரு சம்பவத்தில் மாணவர் ஒருவர் மரணமானார். மற்றும் ஒரு மாணவரும், பொலீஸ் உத்தியோகத்தர் ஒருவரும் காயங்களுக்கு உள்ளாகினர்.

அதனைத் தொடர்ந்து மற்றும் சில அசம்பாவித சம்பவங்கள் நடை பெற்றன.

இந்த நிலையில் தேசிய பாதுகாப்பு அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி புதன் இரவு வானொலி மூலம் நாட்டு மக்க

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 6 பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டன

கொழும்பு, ஜூன் 22

பேராதனை பல்கலைக் கழகமும், அதனுடன் இணைந்த தும்பறை வளாகமும் புதனன்று மூடப்பட்டன.

கொழும்பு, களனி, ஸ்ரீ ஜெயவர்த்தனபுரம், மொறட்டுவை, ருகுனு பல்கலைக்கழகங்கள் நேற்று முதல் காலவரையறையின்றி மூடப்பட்டிருக்கும்-

பத்திரிகை தணிக்கைக்கான தகுதி வாய்ந்த அதிகாரிக்கு ஊடாக உயர்கல்வி அமைச்சு புதன் இரவு வெளியிட்ட அறிவிப்பு ஒன்றில் இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

மறு அறிவித்தல் கிடைக்கும் வரை மாணவர்கள் மேற்படி பல்கலைக்கழகங்களுக்கு சமுகம் அளிக்க வேண்டாம் என உயர் கல்வி அமைச்சு கேட்டுக் கொள்வதாக அந்த அறிவிப்பு மேலும் தெரிவித்தது. (ப-மு).

## சோமன்னா



வெங்காயக் கப்பல் இரண்டு வருகுதாம். இந்தத் தடவையும் கைக்கு எட்டியது வாய்க்கு எட்டாமல் போய்விடக் கூடாது பாருங்கோ.

## வெங்காயத்துடன் மேலும் இரு கப்பல்கள்

கொழும்பு, ஜூன் 22

வெங்காய தட்டுப்பாட்டை நீக்கும் முகமாக, மேலும் இரண்டு கப்

(2ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்பு வலயம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் 40 பேர் சிக்கினர்

கொழும்பு, ஜூன் 22

வடக்கில் கடல் கண்காணிப்பு வலயம் ஏற்படுத்தப்பட்ட பின்பு இதுவரை 40க்கும் அதிகமானோர் கைது செய்யப்பட்டோ, அல்லது கொல்லப்பட்டோ இருக்கின்றனர். அரசாங்க வட்டாரங்கள் இதனைத் தெரிவித்தன. இந்த வலயம் ஏற்படுத்தப்பட்டு 2 மாதங்கள் பூர்த்தியாகி இருப்பது தெரிந்ததே.

இக்காலப் பகுதியில் மிகவும் தேவைப்பட்ட பயங்கரவாதத் தலைவர்கள் இருவரை, பாதுகாப்புப் படையினர் கிழக்கு மாகாணத்தில் கைப்பற்ற முடிந்தது.

இவர்களில் ஒருவர் தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தின் பீல்ட் கமாண்டரான ஜெயச்சந்திரன்.

இவர் பின்னர் களுவாஞ்சிக்குடி பொலீஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டார். இவர் இதே பொலீஸ் நிலையத்தை தாக்க திட்டமிட்டிருந்தார் என்று கூறப்படுகிறது.

கிறிஸ்டி என்றழைக்கப்படும் மற்றவரும் இதே இயக்கத்தைச் சேர்ந்தவர். ஏறூவூர் அருகில் பொலீஸ் துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர் இவர் கைது செய்யப்பட்டார்.

மூன்று பொலீஸாரின் கொலையில் இவர் சம்பந்தப்பட்டவர் என்றும் —

முல்லைத்தீவில் ஆயுர்வேத வைத்தியர் அம்பலவாணர் கொலைக்கும் இவரே பொறுப்பு என்றும் பொலீஸார் கருதுகின்றனர். (த—ந)

### பொதுமக்கள் தாக்கியதில்

# கொள்ளையர் ஒருவர் மரணம்

## வாழைச்சேனையில் சம்பவம்

கொழும்பு, ஜூன் 22

நள்ளிரவு வேளையில் வீட்டுக்குள் புகுந்த கொள்ளைக் கோஷ்டியை, அவ் வீட்டாரும் சுற்றத்தவர்களும் சேர்ந்து தாக்கினர். அதனால் ஒரு கொள்ளையர் மரணமானார்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:—

வாழைச்சேனை பகுதியில் உள்ள வீடொன்றுக்குள் விடியற் காலை இரண்டு மணியளவில் நுழைந்த கொள்ளைக் கோஷ்டி ஒன்று வீட்டில் இருந்தவர்களை தாக்கிவிட்டு, அங்கிருந்த இளம் பெண் ஒருவரைக் கடத்த முற்பட்டது.

அவ்வேளை வீட்டில் இருந்தவர்களும் சுற்றத்தாரும் சேர்ந்து கொள்ளையர்களை திருப்

(2ஆம் பக்கம் பார்க்க)

### யுனிசெப் நிதி உதவியுடன்

# யாழ். அபிவிருத்தி வேலைகள் அடுத்த மாதம் ஆரம்பம்

## ஞாயிற்றுக்கிழமை கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யுனிசெப் நிறுவனத்தின் நிதி உதவியுடன் ஐந்து ஆண்டுத் திட்ட அடிப்படையில் யாழ். நகரில் மேற்கொள்ளப்பட இருக்கும் அபிவிருத்தி வேலைகள் அடுத்த மாதம் முற்பகுதியில் ஆரம்பிக்கப்படும் என்று அறிய வருகிறது.

அபிவிருத்தி வேலைகளை ஆரம்பிப்பதற்கு முன்னோடியாக யாழ். மாநகரில் உள்ள சனசமூக நிலையங்களின் பிரதிநிதிகளை எதிர்வரும் 24ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரவழைத்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்த இருக்கிறார் யாழ். மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம்.

திரு. சிவஞானத்தின் முயற்சியால் யுனிசெப் உதவித் திட்டத்தில் கடந்த டிசம்பரில் யாழ். மாநகரும் சேர்க்கப்பட்டது தெரிந்ததே.

எனினும் உடனடியாக நிதி உதவி கிடைக்குமா என்ற சந்தேகம் இருந்து வந்தது.

யுனிசெப் பிரதிநிதி டாக்டர் கான், டாக்டர் றெக்ஸ் காசிநாதர் ஆகியோரை ஆணையா

(2ஆம் பக்கம் பார்க்க)

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# மின்சார சபைக்கு ரூ.1 கோடி நிலுவை

## நகர சபை செலுத்த வேண்டும்

கொழும்பு, ஜூன் 22

களுத்துறை நகரசபை, இலங்கை மின்சார சபைக்கு, நிலுவைக் கட்டணமாக ஒரு கோடி இருபது லட்சம் ரூபா செலுத்த வேண்டியிருக்கிறது.

மேற்படி தொகையை விரைவில் செலுத்தும்படி உத்தரவிடப்பட்டிருக்கிறது. அவ்வாறு செலுத்தத் தவறினால் களுத்துறை நகர சபைக்கு வழங்கப்படும் விநியோகம் துண்டிக்கப்படும் என்று, இலங்கை மின்சார சபை எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

பல வருடகாலமாக இந்த நகரசபை மின் கட்டணத்தைச் செலுத்த தவறிவந்துள்ளது.

இதனால் அத்தொகை சுமார் ஒருகோடி இருபது லட்சம் ரூபாவரை அதிகரித்திருக்கின்றது.

6,982 பேர், களுத்துறை நகர சபையின் மின் பாவனையாளர்களாகப் பதிவு செய்துகொண்டிருக்கின்றனர்.

இத்தொகை மேலும் அதிகரித்து வருவதாகக் கூறப்படுகின்றது.

இதேவேளை கடந்த மார்ச் மாதத்துக்கு முன்னர் மின்சார நடவடிக்கைகளுக்காக 7 லட்சம் ரூபா செலவிடப் பட்டிருக்கிறது. அத்தொகை மார்ச் மாதத்துக்குப் பின்னர் 7½ லட்சம் ரூபாவாக அதிகரித்திருக்கிறது. இதுபற்றி களுத்துறை நகர சபையின் செயலாளர் கருத்து வெளியிட்டுள்ளார்.

(எ—11)

# தேசிய வைத்தியர் பட்டியல் தயாரிக்க ஏற்பாடு

ஹரிஸ்பத்துவ, ஜூன் 22

ஹரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் உள்ள 62 கிராம சேவகர் வட்டாரங்களிலும் தேசிய வைத்தியர்களின் பட்டியல் ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

சுதேச வைத்தியத்துறை அமைச்சர் திரு. வீ. ஜே. எம். லொக்குபண்டாரவின் பணிப்பின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

கிராம ரீதியாக சுதேச வைத்தியர்களை நியமித்து, கிராம மக்களுக்கும் ஏனையோருக்கும் மேற்படி வைத்தியத் துறையில் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்திக் கொடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

தொகுதி வாரியாக மேற்கொள்ளப்படும் இந்த விவரங்களின் துணையுடன் சுதேச வைத்தியத்துறைக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்துவதே இதன் அடிப்படை நோக்கமா...


அரசாங்க அறிவித்தல்

1964ஆம் ஆண்டின் 28ஆம் இல. காணி எடுத்தல் (திருத்தச்) சட்டப்படி திருத்தப்பட்டவாறான காணி எடுத்தல் சட்டத்தின் (அத். 460) 7ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல: அத் 17/410

கீழ் காணும் அட்டவணையில் விவரிக்கப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விவரங்...


# உதவி அரச அதிபர் பகுதிகளில் லஞ்ச ஒழிப்பு பிரிவுகள்

## அரசு நடவடிக்கை

கொழும்பு, ஜூன் 22

சகல உதவி அரசாங்க அதிபர் பகுதிகளிலும் "லஞ்ச ஒழிப்புப்பிரிவு"கள் அமைக்கப்படும்.

அரசாங்கம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

லஞ்சம் வாங்குவதை உடனடியாக ஒழிக்கும் நோக்கத்துடன் சகல அரசாங்க அதிபர்களினதும் தலைமையில் மேற்படி பிரிவுகள் இயங்கும்.

எல்லா இடங்களிலும் பரந்த அளவில் பரவி வரும் லஞ்ச ஊழல்களைக் குறைப்பதற்கு மேற்படி புதிய திட்டம் வழிவகுக்கும் என்று லஞ்ச ஆணையாளர் திரு. நொயல் விஜேநாயக்க தெரிவித்தார்.

பிரதேச உதவி அரசாங்க அதிபர்களின் தலைமையில் இயங்கும் இந்த லஞ்ச ஒழிப்புப் பிரிவில், அவ்வப்பகுதி சமயப் பெரியார்கள், இயக்கங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பர்.

லஞ்ச ஒழிப்புக்கு ஒத்துழைக்கும் சகலரும் இந்த பிரிவின் நடவடிக்கைகளில் கலந்து கொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்படும்.

நீதிமன்ற ஆலோசனைக் குழுமிட்டி மூலம் நடத்தப்பட்ட ஆய்வொன்றின் பின்னரே உத்தேச திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது.

லஞ்ச ஒழிப்புப் பத்திரிகைகள் துண்டுப் பிரசுரங்கள் ஆகியவற்றை அச்சிட்டு, லஞ்ச சட்ட விதிகளை மேலும் விரிவுபடுத்தி தயாரித்து அவை பற்றிப் பொதுமக்களுக்கு தெளிவுபடுத்துவதற்கும் மேற்படி லஞ்ச ஒழிப்புப் பிரிவு மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

அந்தந்தப் பகுதிகளில் இவ்வாறு பிரிவுகள் அமைத்த பின்னர், லஞ்சம் வாங்குவோர் தொடர்பாக விவரங்களை உடனடியாக லஞ்ச ஆணையாளருக்கு அறிவிக்க வழி பிறக்கும் என்று திரு. விஜேநாயக்க மேலும் தெரிவித்தார்.

இத்தகைய பிரிவுகள் இதுவரை ஆரம்பிக்கப்படாதமையினாலேயே லஞ்சம் வாங்குவோரை உடனுக்குடன் பிடிக்க முடியாத நிலை உருவானது எனவும் அவர் மேலும் சொன்னார்.

(எ—11)

# கிளி பறந்துவிட்டதே என கணவர் ஏசியதை தாளாத மனைவி நஞ்சருந்தினார்

கொழும்பு, ஜூன் 22

வீட்டில் தாம் செல்லமாக வளர்த்த கிளிகளில் ஒன்று பறந்து சென்றுவிட்டது. கோபமுற்ற கணவர் மனைவியை ஏசினாராம் அதனால் வேதனையுற்ற அவர் கிருமிநாசனி அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

இச்சம்பவம் பதுளை வோவஸ்ஸ தோட்டத்தில் நிகழ்ந்திருக்கிறது.

புஷ்பாவதி பள்ளிமுத்து முனியாண்டி என்ற 29 வயதுடைய பெண்ணே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார்.

இந்த மரணம் தொடர்பாக, ரில்பொல, போகொடை கோரண் திடீர் மரணவிசாரணை அதிகாரியும் சமாதான நீதிவானுமான திரு. பீ. பி. ரத்நாயக்கா மரண விசாரணை நடத்தினார்.

விசாரணையின் போது இறந்தவரின் கணவரான பள்ளிமுத்து முனியாண்டி என்பவர் சாட்சியமளித்தார்.

"காலம் சென்றவர் எனது மனைவி. நான் இவரைத் திருமணம் செய்து 15 வருடங்களாகின்றன. எனக்கு நான்கு குழந்தைகளும் இருக்கின்றனர்.

நான் வீட்டில் ஒரு சோடி கிளிகளை செல்லமாக வளர்த்து வந்தேன். அதில் ஒன்று பறந்து சென்று விட்டது. எனவே அதன் பிரிவு எனக்கு மிகவும் வேதனையைத் தந்தது. இதனால் ஆத்திரமுற்ற நான் மனைவியை ஏசினேன் அதன் பின்னர் மனைவி வீட்டு முற்றத்தில் இருந்து யோசித்துக் கொண்டிருந்தார்.

நான் இரவு உணவை உண்டு கொண்டுவிட்டு நித்திரைக்குச் சென்றேன். அடுத்த நாட்காலை எனது மகள் சித்ராதேவி என்னை அழைத்து தாயாரைக் காணவில்லை என்று கூறினார்.

மிகவும் கலவரமடைந்த நான் அவளைத் தேடினேன். அப்போது எமது மலகூடத்தின் கதவு மூடப்பட்டிருந்தது. கதவை உடைத்துப்பார்த்த போது மனைவி மலகூடத்தினுள் இறந்து கிடக்கக் காணப்பட்டாள்.

மனைவியின் வாயிலிருந்து கிருமிநாசனி வாடை வீசியது-

இவ்வாறு கணவர் கூறினார்.

சித்ராதேவி என்ற 10 வயது மகளும் சாட்சியமளித்தார்.

விஷம் அருந்தியதால் மரணம் சம்பவித்துள்ளது என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

(எ—11)

# தோட்டப்பகுதி மாணவருக்கு தகுந்த பாதுகாப்பளிக்கவும்

## நிர்வாகங்களுக்கு வேண்டுகோள்

கொழும்பு, ஜூன் 22

பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் போதிய பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். குறிப்பாக தோட்டப் பகுதியிலிருந்து அண்மையில் உள்ள நகர்ப் புறப் பாடசாலைகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு அந்தந்தத் தோட்ட நிர்வாகங்கள் தகுந்த பாதுகாப்பு அளிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு, பதுளை மாவட்ட...

...தேச மேலதிக தொழிலுறவு இயக்குநருமான திரு. எம். சுப்பையா வலியுறுத்தியிருக்கிறார்.

மாணவர்களைக் கடத்தும் கோஷ்டியினர் இப்பொழுது மலையகமெங்கும் தமது கைவரிசையைக் காட்டி விடுகின்றனர்.

துரதிர்ஷ்டவசமாக மலையகத்தில் மேற்கொள்ளப்பட்ட மாணவர் கடத்தல் முயற்சிகள் வெற்றியளிக்கவில்லை. ஆனாலும் கடத்த முனைந்தவர்கள் தப்பிச் சென்று விட்டனர். எவரும் கைது செய்யப்படவும் இல்லை.

மாணவரின் பெற்றோர் ...

...சாலைக்குச் சென்று வருகின்றனர். வசதியுள்ளவர்கள் தனியாக சம்பளம் கொடுத்து ஆட்களை அமர்த்தியிருக்கின்றனர்.

தோட்டப் புறங்களில் இருந்து, நகர்ப்புறப் பாடசாலைகளுக்கு வரும் மாணவர்களின் பெற்றோர் தினசரி தமது வேலையை இழந்து காலையும், மாலையும் பிள்ளைகளுடன் பாடசாலைக்குச் சென்று வருவது முடியாத ஒரு செயலாகும்.

சம்பளம் கொடுத்துத் தனியாக ஒருவரை துணைக்கு அனுப்ப பொருளாதாரம் இடம் கொடுப்பதில்லை.

எனவே இப்பகுதியில் உள்ள தோட்டங்களில் இருந்து பாடசாலைக்கு வரும் மாணவர்களின் பாதுகாப்பிற்காக அந்தந்தத் தோட்ட நிர்வாகங்கள் பாதுகாப்பு ஊழியர்களை நியமிக்க வேண்டும்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றிற்கு திரு. சுப்பையா இப்படி வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

தோட்ட நிர்வாகங்கள் இப்படியான கோரிக்கைகளை நிராகரித்தால், மாவட்ட அபிவிருத்திச் சபையின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் திரு. சுப்பையா தினபதிக்குத் தெரிவித்தார்.

(எ—ய)

# தீவிரமாக பரவும் கண் நோய்

மாவனல்லை, ஜூன் 22

திப்பிடிய, அரநாயக்கா பகுதிகளில் கண்நோய் தீவிரமாகப் பரவி வருகின்றது.

அத்தோடு தடிமலாலும் எண்ணற்றோர் இப்பகுதிகளில் பாதிப்புற்றுள்ளனர்.

கண்நோய், தடிமல் போன்றவற்றிற்குச் சிகிச்சை பெற தனியார், மற்றும் அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு மக்கள் படையெடுத்த வண்ணம் இருக்கின்றனர்.

(எ—188)

# வேலை நீக்கப்பட்ட

நிக்கப்பட்டுள்ள காணியை எடுத்துக் கொள்ள அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விவரங்களுக்கு 1984ஆம் ஆண்டு ஜூன் மாதம் 8ஆம் திகதிய 300/14 இலக்கம் கொண்ட இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேஷ வர்த்தமானிப் பத்திரிகையைப் பார்க்கவும்.

அட்டவணை

உதவி அரசாங்க அதிபர்:— நுகேகொட.

அமைவு:— தெகிவளை — கல்கிசை மாநகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இலக்கங்கள் 1, விலவல, துட்டுகெமுனு வீதி.

கிராமத்தின் பெயர்:— பாமன்கடை, கொகுவல, களுபோவில.

காணியின் பெயர்:— —

துண்டு இல:— 01 — 90.

பூர்வாங்க பட இலக்கம் கொ:— 5967

எச். சி. குணவர்த்தன,
மாவட்ட காணி அலுவலர்,
காணி கொள்வனவு உத்தியோகத்தர், கொழும்பு மாவட்டம்.

கச்சேரி, கொழும்பு.
1984/05/30.

1415

## இலங்கை அரசாங்க புகையிரதத் திணைக்களம் புகையிரதக் கடவையைப் புதுப்பித்தல்

என். 614.

பிரதான புகையிரதப் பாதையில் களனி, மருதானை ஆகிய புகையிரத நிலையங்களுக்கிடையில் 01 மைல் 40 சங்கிலியில் டாக்டர் டனிஸ்ரர் த சில்வா (பேஸ்லைன்) மாவத்தையில் அமைந்துள்ள புகையிரதக் கடவையைப் புதுப்பிக்கும் வேலைகள் 23–6–84, 24–6–84 ஆகிய திகதிகளில் மேற்கொள்ளப்படும்.

இப்புகையிரதக் கடவை வாகனப் போக்குவரத்திற்காக 23–6–84 அன்று 07–00 மணியிலிருந்து 21–00 மணி வரையும், பின்னர், 24–6–84 அன்று 07–00 மணியிலிருந்து 13–00 மணி வரையும் ஒரு பகுதி மூடப்பட்டிருக்கும். 23–6–84 அன்று 21–00 மணியிலிருந்து 24–6–84 அன்று 05–00 மணிவரை, இப்புகையிரதக் கடவை வாகனப் போக்குவரத்திற்காக முற்றாக மூடப்பட்டிருக்கும்.

இப்புகையிரதக் கடவை பகுதியாக மூடப்பட்டிருக்கும் போது வாகனப் போக்குவரத்திற்கு வேண்டிய ஒழுங்குகள் மேற்கொள்ளப்படும். இக்கடவை முற்றாக மூடப்பட்டிருக்கும் போது கொலன்னாவ, வெல்லம்பிட்டிய ஊடாக ஊறுகொடவத்தைக்கும், தெமட்டகொட வீதி ஊடாக மருதானை, மாளிகாவத்தைக்கும் வாகனப் போக்குவரத்து திசை திருப்பப்படும்.

ஒப்பம்:
சி. பஞ்சாட்சரவேல்,
புகையிரதத் திணைக்களப் பொது முகாமையாளருக்காக.

1536

வைத்தியத்துறைக்கு மறு மலர்ச்சி ஏற்படுத்துவதே இதன் அடிப்படை நோக்கமாகும். (எ—105)

அளிக்க முன்வர வேண்டும்.

இவ்வாறு பதுளை மாவட்ட அபிவிருத்திச் சபை உறுப்பினரும், இ. தொ. கா. ஊவா பிர

பிச் சென்று விட்டனர். எவரும் கைது செய்யப்படவும் இல்லை.

மாணவரின் பெற்றோர் தமது பிள்ளைகளுக்குத் துணையாக காலையும், மாலையும் பாட

சம்பள உயர்வு கோரும்

# சாத்வீக போராட்டத்துக்கு

## சாரம், ஷேர்ட் அணிந்து ஆதரவு

மஸ்கெலியா, ஜூன் 22

தோட்ட உத்தியோகத்தர்கள், சாரம், ஷேர்ட், கறுப்புப்பட்டி, செருப்பு அணிந்து அலுவலகங்களுக்கும் தொழிற்சாலைகளுக்கும், மலைகளுக்கும் சென்று கடமையாற்றி வருகின்றனர். இதன் மூலம் சம்பள உயர்வு கோரும் சாத்வீக போராட்டத்துக்கு அவர்கள் ஆதரவு தெரிவித்து வருகின்றனர்.

மஸ்கெலியா, பொகவந்தலாவை, சாமிமலை, நோட்டன், நோர்வூட், டிக்கோயா ஆகிய நகர்களுக்கு அண்மையில் பல தேயிலைத் தோட்டங்கள் இருக்கின்றன.

நூற்றுக்கும் அதிகமான இந்தத் தோட்டங்கள் ஜனவசமவுக்கும் அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்துக்கும் சொந்தமானவையாகும்.

இத் தோட்ட அலுவலகங்களிலும் தேயிலைத் தொழிற்சாலைகளிலும் மலைகளிலும் பெரும் தொகையான உத்தியோகஸ்தர்கள் சேவையாற்றுகின்றனர்.

எழுதுவினைஞர்களாக, டீமேக்கர்களாக, மலைவேலை மேற்பார்வையாளர்களாக (கே. பி., சுப்பவைசர்) டிறைவர்களாக நூற்றுக்கணக்கானோர் கடமையாற்றி வருகின்றனர்.

"1975 ஆம் ஆண்டிற்குப் பின்னர் அரசாங்க ஊழியர்களுக்கும், கூட்டுத்தாபன தனியார் துறை ஊழியர்களுக்கும், எம். பிக்களுக்கும், அமைச்சர்களுக்கும், ஜனாதிபதிக்கும், தோட்டத் தொழிலாளர்களுக்கும் சம்பள உயர்வுகள் பல வழங்கப்பட்டுள்ளன ஆனால் தோட்ட சேவையாளர்களுக்கு இதுநாள்வரை சம்பள உயர்வு வழங்கப்படவில்லை.

"தற்போது வழங்கப்படும் சம்பளம் இன்றைய வாழ்க்கையை நடத்துவதற்கு போதுமானதாக இல்லை. அத்தியாவசிய தேவைகளுக்கு கூட இந்தச் சம்பளம் போதவில்லை. நாளுக்கு நாள் கடன் சுமை அதிகரித்து வருகிறது. எனவே எங்களுக்கும் சம்பள உயர்வு வழங்க வேண்டும்.

"எமது ஏழ்மை நிலையையும் அதிருப்தியையும் காட்டுவதற்காக சாரம், ஷேர்ட், வலது கையில் கறுப்புப்பட்டி ஆகியன அணிந்து கடமையாற்றி வருகின்றோம்.

"தோட்ட சேவையாளர் சங்கம், இலங்கைத் தோட்ட சேவையாளர் காங்கிரஸ் ஆகியவற்றில் அங்கம் வகிக்கும் நாங்கள் இரண்டாவது வாரமாக சாத்வீகப் போராட்டத்தை நடத்தி வருகிறோம்.

"எல்லாத் தோட்டச் சேவையாளர்களும் இப்போது இணைந்து போராடுகின்றனர்" இவ்வாறு நோர்வூட் பகுதி தோட்ட சேவையாளர் சாத்வீக போராட்ட அமைப்பாளரான திரு. எஸ். செல்வரட்ணம் தெரிவித்தார். (எ–191)

## வெங்காயத்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பல்கள் வெங்காயத்தை ஏற்றிக் கொண்டு அடுத்த வார நடுப் பகுதியில் கொழும்புத் துறைமுகத்தை வந்தடையும்.

இந்த இரு கப்பல்களும் பம்பாய், கராச்சி துறைமுகங்களில் இருந்து வெங்காயத்தை ஏற்றிக் கொண்டு புறப்படும் என்று, கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இரு கப்பல்களிலும் 1,500 தொன் வெங்காயம் வரவழைக்கப்படும்.

[illegible]

## கொழும்பு பாட...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

லைக் கோரி அரசாங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு நல்ல பலன் கிடைத்தது.

எனினும், கொழும்பில் சில சம்பவங்களை ஏற்படுத்துவதில் தீவிரவாத சக்திகள் வெற்றியடைந்துள்ளன.

ஒரு சம்பவம், நேற்றுக் காலை பல்கலைக்கழக மாணவர்கள், ஹவ்லொக் வீதியில் வைத்து பஸ்கள் மீதும், பொலீஸார் மீதும் தாக்குதல் நடத்திய போது ஏற்பட்டது.

ஒரு போக்குவரத்துச் சபை பஸ்ஸுக்குத் தீ வைக்கப்பட்டது. இச்செயலில் ஈடுபட்ட கோஷ்டியினரைக் கலைக்க பொலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். இதனால் ஒருவர் இறந்தார். மற்றொருவர் காயமடைந்தார் பொலீஸ்காரர் ஒருவரும் காயமடைந்தார்.

அரசாங்கம் எதிர்பார்த்தது போல, குழப்பங்களைத் தூண்டும் தீவிரவாதிகள் நேற்றுக் காலை, பாடசாலை மாணவர்களைப் பாடசாலைகளிலிருந்து வெளியேற்ற வைப்பதற்கு முயற்சித்தனர். இதில் அவர்கள் தோல்வி கண்டனர்.

வன்செயல்கள் எந்தக் கோணத்தில் இருந்து கிளம்பினாலும் அவற்றை முறியடிக்க அரசாங்கம் உறுதியுடன் நடவடிக்கை எடுக்கும். அமைதி விரும்பும் மக்கள், குறிப்பாக மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர் ஆகியோரின் ஒத்துழைப்பை அரசு கோருகிறது.

தீவிரவாத தலைவர்களும் வன்செயல்களைத் தூண்டுவோரும், வழிதவறிச் செல்லும் மாணவர்களை உபயோகித்து, இரத்தக்களரி ஏற்படுத்துவதுடன் பொது மக்களுக்கு உயிராபத்தும் உடைமைகளுக்குச் சேதமும் ஏற்படுத்த முயற்சிக்கின்றனர்.

தூண்டுதலில் ஈடுபட்டுள்ளவர்கள் இனங் காணப்பட்டுள்ளனர். இதுவரை 15 பேர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். மேலும் பலரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மறைந்திருக்கும் தீவிரவாதிகளை வெளிக்கொணரவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. [illegible]

பல்களில் ஒன்று காணமல் போனதும் — மற்றது விபத்துக்குள்ளாகி கடலில் மூழ்கியதும் தெரிந்ததுவே. (து—[illegible])

# வேலை நீக்கப்பட்ட

## றப்பர் தொழிலாளிக்கு

### நட்டஈட்டுடன் மீண்டும் வேலை

கொழும்பு, ஜூன் 22

16 மாதங்களாக வேலை நிறுத்தப்பட்டிருந்த றப்பர் தோட்டத் தொழிலாளி ஒருவருக்கு 7,608 ரூபா 64 சதம் நட்டஈடும், மீண்டும் வேலையும் வழங்கும்படி களுத்துறை தொழில் நீதிமன்ற நீதிவான் தீர்ப்பு வழங்கினார்.

மத்துகமை சென். ஜோர்ஜ் தோட்டத் தொழிலாளியான எஸ். நல்லதம்பி என்பவருக்கு எதிராக தோட்டத் கண்டக்டர் புகார் செய்திருந்தார்.

கண்டக்டரின் புகாரை அடுத்து நல்லதம்பியை தோட்ட நிர்வாகம் 1983 ஆம் ஆண்டு பெப்ரவரி 9 ஆம் திகதி முதல் வேலை நீக்கம் செய்தது.

இதனை ஆட்சேபித்து, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கம் தொழில் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்தது.

இவ்வழக்கை விசாரித்த களுத்துறை தொழில் நீதிமன்ற நீதிவான் நல்லதம்பி என்ற அந்தத் தொழிலாளிக்கு நஷ்டஈடாக 7,608 ரூபா, 64 சதமும் மீண்டும் வேலையும் வழங்கும்படி தீர்ப்பளித்தார்.

நல்லதம்பியின் சார்பில் இ. தே. தோ. தொழிலாளர் யூனியன் சட்டத்தரணி திரு. ஈ. எஸ். சொயிஸா ஆஜரானார். (எ—ய)

## புதிய தபால் நிலையம் திறப்பு

கொழும்பு, ஜூன் 22

அக்குரஸ்ஸை தேர்தல் தொகுதியிலுள்ள கல்பமுன கிராமத்தில் புதிய தபால் அலுவலகம் திறக்கப்படவிருக்கிறது.

அக்குரஸ்ஸ தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினரான திரு. தயானந்த விக்கிரமசிங்காவின் சிபார்சின் பேரில், தபால் திணைக்களம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது. (எ–11)

## யாழ். அபிவி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளர் நேரில் சந்தித்து நிலைமையை விளக்கியதை அடுத்து நிதி கிடைப்பது உறுதியாகி விட்டது.

யாழ். நீர் விநியோகத் திட்டம், குழி மலசலகூடங்களை அகற்றி நீரமைப்பு மலசல கூடங்களை அமைத்தல், சிறு கைத்தொழில்களை ஆரம்பித்தல் போன்ற முக்கிய பணிகளுக்கு யுனிசெப் நிதி பயன்படுத்தப்பட இருக்கிறது. (உ–ங–120)

## கொள்ளையர்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பித் தாக்கினர். இவர்களின் தாக்குதலினால் ஒருவர் கீழே விழுந்தார். ஏனையவர்கள் தப்பி ஓடினர்.

தாக்கப்பட்டவர் பின்னர் ஆஸ்பத்திரியில் மரணமானார்.

வாழைச்சேனைப் பொலீஸார் இது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றனர். (த–ர)

யில் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. (உ–க)

யார், மற்றும் அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்கு மக்கள் படையெடுத்த வண்ணம் இருக்கின்றனர். (எ—188)

தினபதி
சிறு விளம்பரம்

## இஸ்லாமிய கீதம்

திருக்குர்ஆன், புர்தா ஷரீப், பத்று மௌலூத், முஹியத்தீன் மாலை, ஐயூப் நபி, யூசுப் நபி, பிலால் (ரலி) சரித்திரம், நோன்பின் சிறப்பு, நூறு மஸாலா, காரைக்கால் தாவூத் ஈ. எம். ஹனீபா. சேக் முஹம்மது, ஹுஸைன்தீன் மற்றும் பலர் பாடிய இஸ்லாமிய கீதங்கள், நாயகத்தின் பிறப்பின் சிறப்பு போன்றவை, பதிவு செய்யப்பட்ட கஸட்கள் வாங்க சிறந்த இடம்.
Twinkle, P1, Front Street, Colombo 11.

## பிறந்த நாள் வாழ்த்து



செல்வப் புதல்வன் முகம்மது பாயிஸ்

நிந்தவூர், 3ஆம் குறுக்குத் தெரு, 4ஆம் பிரிவைச் சேர்ந்த அப்துல் லத்தீப் ஹனிஸா தம்பதிகளின்செல்வப் புதல்வன் முகம்மது பாயிஸ் தனது முதலாவது பிறந்த தினத்தை 84–06–21ஆம் திகதி மிக குதூகலமாக தனது இல்லத்தில் கொண்டாடினார்.

முகம்மது பாயிஸை வாப்பா, உம்மா, வாப்பாவாப்பா, வாப்பம்மா, உம்மா வாப்பா, உம்மம்மா, பெரிய வாப்பாமார்கள், பெரிய உம்மாமார்கள், கொழும்பு சின்ன வாப்பா, ஹைறுன் நிஸா மாமி, மாமாமார், சுபைறு அன்ரி, மர்ளியா அன்ரி, காக்காமார், ராத்தாமார்களுடன் மற்றும் உற்றார், உறவினர்களும் அல்லாஹ்வின் அருளால் சகல கலைகளும் கற்று நீடூழி வாழ்கவென வாழ்த்தினார்கள்.

## "ஒரு ரசிகை என் காதலி"

மோகன் — ரேவதி ஜோடியாக நடிக்கும் படம், பசும் பொன் தேவர் கிரியேசன்ஸ் தயாரிக்கும் "ஒரு ரசிகை என் காதலி"

படப்பிடிப்பு சென்னையை அடுத்த மணிமங்கலம் கிராமத்தில் நடந்தது. இதில் பிறவி ஊமையாக வேடமேற்று நடிக்கிறார். மோகன், வடிவுக்கரசி, திலீப், கல்லாப்பெட்டி, சிங்காரம், காந்திமதி மற்றும் பலர் நடிக்கிறார்கள்.

சங்கர் – கணேஷ் இசை அமைக்க, எம். பாலசுந்தர் கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார். ஆர். ஆர். பழனிசாமி தேவர், கோவை சுந்தர்ராஜன் தயாரிக்கிறார்கள். (ஜு-10)

## 'நீதி என் கையில்' புதுமுகம் கமல்காந்த்

"மதுரை சூரன்" படத்தை அடுத்து கே. வி. கிரியேசன்ஸ் படக் கம்பெனியார் அடுத்து "நீதி என் கையில்" என்ற பெயரில் ஒரு படம் தயாரிக்கிறார்கள். புதுமுகம். கமல்காந்த் கதா நாயகனாக அறிமுகமாகிறார். இவர் ஒரு பி. எஸ். சி- பட்டதாரி-

இவரது ஒரு ஜோடியாக வனிதாவும், மற்றொரு ஜோடியாக ஒரு புதுமுகமும் நடிக்கிறார்கள்.

ராதாரவி, எஸ். எஸ். சந்திரன், சி- எல்- ஆனந்தன், வெ.6 ஆ. மூர்த்தி லூஸ் மோகன், காந்திமதி, பிந்து கோஷ், குமரி முத்து, இடிச்சபுளி செல்வராஜ், காஞ்சிரங்கமணி, உசிலைமணி, இவர்களுடன் அனுராதாவும் நடிக்கிறார்.

இதன் கதை வசனத்தை எழுதி, எம். ஆர். விஜயசந்தர் இயக்குகிறார்.

ஏ. வி- எம்மில் பாடல் பதிவுடன் ஆரம்ப விழா நடந்தது. வி- ரகு ஒளிப்பதிவை கவனிக்க, சங்கர் கணேஷ் இசை அமைக்கிறார்கள். (ஜு-10)



"குறும்புக்காரி, இடுப்பில் வலிக்க அடித்துவிட்டுச் சிரிக்கிருயா?" என்று பிரபு ராதாவைப் பார்த்து முழிக்கிருரோ? படம்: "இரு மேதைகள்" (ல-10)

## 'உயிரில் கலந்த உறவு'

சரஸ்வதி மூவி கிரியேசன்ஸ் தயாரிக்கும் படத்திற்கு "உயிரில் கலந்த உறவு" என்று பெயரிடப்பட்டு இருக்கிறது.

சுரேஷ். இளவரசி, அனுராதா ரஜனிதேவி, காந்திமதி, லூஸ் மோகன் நடிக்கிறார்கள்.

கதை வசனத்தை ஜி. ஜி. ராம்ஜி எழுதுகிறார். லட்சுமணன் ஒளிப்பதிவு செய்கிறார். பாலராகவேந்திரா டைரக்டு செய்கிறார். (ம-10)

# விக்டோரியா நீர் மின் சக்தி ஜூலையில்

கண்டி, ஜூன் 21

துரித மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் விக்டோரியா திட்டம் மூலம் உற்பத்தி செய்யப்படும் நீர் மின்வசதி ஜூலை மாதம் அளவில் கிடைக்க இருக்கிறது.

மின்சாரப் பாவனையாளர்கள் இப்பொழுது செலுத்தும் மேலதிக எரிபொருள் கட்டணம் அதி விரைவில் நீக்கப்படும் எனவும் தெரிய வருகின்றது.

விக்டோரிய நீர்த்தேக்கம் மூலம் ஜூலையில் உற்பத்தி செய்யப்படும் 70 மெகவோர்ட் நீர் மின்வலு இயக்க இயந்திரங்கள் ஹக்குருதல என்னும் இடத்தில் பொருத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் 420 மெகவார்ட் மின் உற்பத்தி செய்யத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

70 மெகவோர்ட் மின் உற்பத்தியைப் பெற இப்பொழுது மூன்று டர்பைன் யந்திரங்கள் பொருத்தப்பட்டிருக்கின்றன.

இந்த மின் சக்தி விநியோகம் தொடர்பான பொது வைபவம் ஒன்று அக்டோபர் மாதம் விக்டோரியாவில் நடைபெற ஏற்பாடாகி இருக்கிறது.

ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் நீர் மின் விநியோக ஆரம்ப திட்டத்தை ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தொடக்கி வைப்பார்.

இதேவேளை முழுமையாக வேலைத் திட்டங்கள் முற்றுப் பெறும் அக்டோபர் மாதத்தில் இடம்பெறவிருக்கும் பிரமாண்டமான வைபவத்தில் பிரிட்டிஷ் பிரதமர் திருமதி மார்கரட் தாட்சர் கலந்து கொள்வார் எனக் கருதப்படுகிறது.

விக்டோரியா நீர்த் தேக்கத்தில் இப்பொழுது நீர் 120 அடி வரை உயர்ந்திருக்கிறது. நீரில் மூழ்கடிக்கப்படும் இடங்களில் இருந்து பலரும் தங்களது இருப்பிடங்களைவிட்டு வெளியேறி விட்டனர்.

எதிர்வரும் 30 ஆம் திகதியளவில் விக்டோரியாநீர்த் தேக்க நீரின் மட்டம் 200 அடியாக உயரும் என நம்பப்படுகின்றது. (ல—105)

முற்றிலும் அழுகாத சடலம்

## 50 வருடங்களுக்கு முன்னர் அடக்கம் செய்யப்பட்டதா?

### ஹிங்குள் ஓயாவில் கண்டுபிடிப்பு

மாவனல்லை, ஜூன் 21

அரை நூற்றுண்டுக்கு முன் அடக்கம் செய்யப்பட்டதாக கருதப்படும் சடலம் ஒன்று முற்றிலும் அழுகாத நிலையில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது.

இச்சடலம் சுமார் 25 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவருடையதாகும்.

மாவனல்லை பிரதேசத்தில் உள்ள ஹிங்குள்ஓய கிராமவாசிகள் இதனைக் கண்டுபிடித்தனர்.

ஹிங்குள்ஓய மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாசல் மையவாடியில் இச்சடலம் கண்டுபிடிக்கப் பட்டது.

அண்மையில் ஜும்ஆ தொழுகையின்போது ஒரு புதைகுழி மீது (கபூறி) தேங்காய் ஒன்று விழுந்தது. இதனைத் தொடர்ந்து அந்த புதைகுழி பிளவுபட்டது.

அங்கு விரைந்த கிராமவாசிகள் புதைகுழியைப் பார்த்த போது ஒரு இளைஞனின் சடலம் ... கள் திரண்டு வந்ததால், இந்த புதைகுழி உடனடியாக மூடப்பட்டது. (ல-ங-188)

## மோட்டார் வாகன திணைக்களத்துக்கு ரூ. 2 கோடி லாபம்

கொழும்பு, ஜூன் 22

கடந்த வருடம் மோட்டார் வாகனத் திணைக்களம் 2 கோடியே 10 லட்சம் ரூபாவை வருமானமாகப் பெற்றிருக்கிறது.

விற்பனைவரி, அனுமதிப்பத்திர தீர்வை போன்றவற்றை அறவிடுவதன் மூலமே திணைக்களம் மேற்படி தொகையை வருமானமாகச் சம்பாதித்திருக்கிறது.

மேற்படி திணைக்களத்தின் வருமானம் 1982ஆம் ஆண்டு 31 வீதமாக அதிகரித்துள்ளது.

பெருந் தொகையான மோட்டார் வாகன இறக்குமதியாலும், வரியை அறவிடுவதில் திணைக்களம் மேற்கொண்ட தீவிர நடவடிக்கைகளினாலுமே - இத்தகைய வருமானத்தைப் பெறக்கூடியதாக இருந்தது எனத் திணைக்கள பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

மோட்டார் வாகனத் திணைக்களத்தின் வருமானம் அண்மைக் காலத்தில் பெருமளவாக அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வருகிறது.

தற்போது நாட்டில் 4,39,661 வாகனங்கள் பாவனையில் இருக்கின்றன. இவற்றில் 136 853 கார்களும், 121,840 மோட்டார் சைக்கிள்களும் அடங்கும். (ர)

## மோகனுக்கு பெரும் அதிர்ச்சி

"உன்னை பெரிய சினிமா இசை அமைப்பாளனாக ஆக்கி, எனது மகளையும் உனக்கு திருமணம் செய்து வைக்கிறேன்" என்று படத் தயாரிப்பாளர் ஒருவர் மோகனிடம் சொன்னதே சொன்னார், மோகன் அதிர்ச்சி அடைந்து நின்றார்.

ஏனென்றால், ஏற்கனவே மோகன் திருமணம் ஆனவர். மோகனின் அதிர்ச்சிக்கு இதுவே காரணம்.

பட அதிபராக தேங்காய் சீனிவாசன் நடிக்க, இந்தக் காட்சி விரைவில் திரைக்கு வரும் எஸ். என். எஸ். புரொடக்சன்ஸ் "மகுடி" என்ற படத்

## நவக்கிரக நாயகி கே. ஆர். விஜயா

திருவேற்காடு கருமாரி அம்மனின் தெய்வீக சக்தியை வெளிப்படுத்தும் கதை. "நவக்கிரக நாயகி." இந்தப் பெயரில் படம் எடுக்க, விசாகம் ஆர்ட்ஸ் ஏற்கனவே முடிவு செய்திருந்தது.

"நவக்கிரக நாயகி" என்ற பெயரில் நடிகர் காஞ்சி ரங்கமணி கதை எழுதி நாடகமாக நடத்திக் கொண்டிருக்கிறார். நாடகக் கதையை தழுவியே திரைப்படம் தயாரிக்கப்படுகிறது.

இதன் படப்பிடிப்பு ஏற்காடு மலையில் தொடங்கி தொடர் ... வனும் (சுரேஷ்) குருபகவான் மகளும் (சசிகலா) ரகசியமாக காதல் ஆட்டம் போடும் காட்சிகள் ஏற்காடு மலையில் படம் ஆக்கப்பட்டன.



இலங்கை மத்திய வங்கி

ரூ. 20 கோடி கொண்ட ஆண்டொன்றிற்கு 14சதவீத இலங்கை மத்திய வங்கியினது

## தினபதி சினிமா

துக்காக படமானது. மோகன் நளினி ஜோடியாக நடிக்கிறார்கள்.

கதை வசனம் பாடல் வாலி எழுத, இளையராஜா இசை அமைக்க, ஜி. ஆர். நாதன் ஒளிப்பதிவு செய்கிறார். எஸ். என். சவுந்தரராஜன் தயாரிக்கும் "மகுடி" படத்தின் டைரக்ஷன்: என். சி. சக்கரவர்த்தி.

(ஜூ—10)

கிறது.

இதன் படப்பிடிப்பு ஏற்காடு மலையில் தொடங்கி தொடர்ந்து ஒரு வாரம் நடந்தது.

"நவக்கிரக நாயகி" யாக கே. ஆர். விஜயா நடிக்கிறார். ஸ்ரீவித்யா, அம்பிகா, ஊர்வசி, சசிகலா, விஜயகாந்த், சுரேஷ் எம். என். நம்பியார், ஜெய் கணேஷ், சரத்பாபு, ரோகிணி காஞ்சி ரங்கமணி நடிக்கிறார்கள்.

தேவலோகத்து குருவான குரு பகவான் மகள், கந்தர்வனை காதலிக்க, இதற்கு குருபகவான் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார் ஆனாலும் இந்த கடும் எதிர்ப்பை மீறி கந்தர்



கே. ஆர். விஜயா

"நவக்கிரக நாயகி" யின் வசனத்தை வியட்நாம் வீடு சுந்தரம் எழுத, எம். சி. சேகர் ஒளிப்பதிவை கவனிக்க, எம். எஸ். விசுவநாதன் இசை அமைக்கிறார். டைரக்ஷன் கே. சங்கர்.

(ஜூ—10)

அங்கு விரைந்த கிராமவாசிகள் புதைகுழியைப் பார்த்த போது ஒரு இளைஞனின் சடலம் அழுகாத நிலையில் இருப்பதைக் கண்டனர்.

நாலரை அடி மதிக்கத்தக்க இந்த சடலம் (ஜனஸா) யாருடையது? எப்போது அடக்கம் செய்யப்பட்டது? உறவினர் யார்? என்ற விவரங்கள் தெரியவில்லை. வயோதிபர்களுக்குத் தானும் நினைவில்லை.

ஐம்பது வருடத்திற்கு முன்னர் இச்சடலம் அடக்கம் செய்யப்பட்டிருக்கலாம் என கிராமவாசிகள் நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இந்த சடலத்தைப் பார்க்க உள்ளூரிலிருந்தும் வெளியூர்களிலிருந்தும் பெருந் திரளான மக்

முந்தானை முடிச்சு புகழால்:

# நான் இளமையில் நடித்த படமும் இப்போது ஓடுகிறது

## ஊர்வசி கூறுகிறார்

"ஒரே படத்தில் டாப் நடிகையாகிவிட்ட நீங்கள் ஸ்ரீபிரியா கூப்பிட்டவுடன் நடிக்கப்போனதற்கு அவரும் உங்களைப் போலவே அக்கா வைஜயந்தி முதலில் நடிக்க வந்தும் அவரை விட புகழ் பெற்றதுதான் காரணமோ?

இவ்வாறு பத்திரிகை நிருபர் ஒருவர் ஊர்வசியிடம் கேட்டார்.

அதற்கு ஊர்வசி கூறிய பதில்:

இல்லை. ஒரு பெரிய நடிகை டைரக்ட் செய்யும் படத்தில் திடீரென்று சான்சு கிடைத்ததும் சந்தோஷமா இருந்தது. ஒப்புக் கொண்டு விட்டேன்."

"சாந்தி முகூர்த்தம்" என்ற அந்த படத்தில் நீங்கள் இதுவரை இல்லாத அளவிற்கு கவர்ச்சியாக நடித்து இருக்கிறீர்களாமே உண்மையா?"



ஊர்வசி

இதுவரை எந்த பெரிய ஹீரோவின் நடிகையும் செய்யாததை நான் செய்யவில்லை. ஒரு மழைக் காட்சியில் ஓரளவு கவர்ச்சியாக மோகனுடன் நடித்து இருக்கிறேன். அவ்வளவுதான்!

நளினி, விஜி போன்றவர்கள் முதலில் நடிக்கும் படங்களில் அவர்களை ரத்து செய்துவிட்டு உங்களைப் போடுகிறார்களாமே. அது தெரிந்தும் ஒப்புக் கொள்வது சரிதானா? என்ற கேள்விக்கு சிரித்தபடி ஊர்வசி சொன்ன பதில்:

படவுலகில் இது எல்லாம் சகஜம். நானாகப் போய் எந்தப் பட அதிபரிடமும் என்னைப் போடுங்கள் என்று கேட்பதில்லை. அவர்களாக வந்தால் மறுப்பதுமில்லை. இதுதான் நடிப்பை பொறுத்த அளவில் எங்கள் பாலிசி?

பேச்சின்போது ஊர்வசி கூறிய ஒரு தகவல் அவர் முந்தானை முடிச்சுக்கு முன்பு இளம் வயதில் நடித்த மலையாளப் படம் ஒன்று இப்போதுதான் வெளியிட்டு இருப்பதாகவும் மு. மு. பெற்ற புகழ் காரணமாக அதுவும் ஓடுவதாகவும் குறிப்பிட்டார்.

கன்னடம், தெலுங்கு படங்களில் நடிக்க ஆரம்பித்திருப்பதாகவும் ஊர்வசி தெரிவித்தார்.

(ல—10)

## மன்னார் அபி. திட்டத்துக்கு முதலிடம்

பேசாலை, ஜூன் 21

எமது நாட்டில் ஏழு மாவட்டங்களில் உலக வங்கியின் ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இதில் மன்னார் மாவட்ட ஒருங்கிணைந்த கிராம அபிவிருத்தித் திட்டமே முன்னணி வகிக்கின்றது.

இவ்வாறு அடம்பன் உதவி அரசாங்க அதிபர் திரு. வி. முருகையா கருத்துத் தெரிவித்தார்.

(எ—251)

## மொனருகலையில் தென்னை வளர்ப்பு

பண்டாரவளை, ஜூன் 21

மொனருகலை மாவட்டத்தில் ஆறு ஏக்கரில் தென்னை வளர்ப்புத் திட்டம் ஒன்று செயல்படுத்தப்பட இருக்கிறது:

தென்னை அபிவிருத்திச் சபை இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கிறது.

பிபில, மொனருகல வெள்ளவாய ஆகிய தேர்தல் தொகுதிகளில் இத் திட்டத்திற்காக காணி ஒதுக்கப்பட்டிருக்கிறது.

உதவிகள், ஆலோசனைகள் போன்றவற்றைத் தென்னை அபிவிருத்திச் சபை வழங்கவுள்ளது.

இதற்காக உப காரியாலயம் ஒன்று மொனருகலையில் அமைக்கப்பட்டிருக்கிறது. (எ—39)

## சாந்தி கிருஷ்ணாவின் கடைசி படம் "அன்புள்ள மலரே"

சாந்தி கிருஷ்ணா கடைசியாக நடித்து வெளிவரும் படம் "அன்புள்ள மலரே" முதலில் "இலையுதிர் காலம்" என்ற பெயரில் உருவான படம் தான் "அன்புள்ள மலரே" என்று மாற்றுப் பெயரில் வெளி வருகிறது.

இந்த படத்தோடு சாந்தி கிருஷ்ணா நடிப்புக்கு முழுக்குப் போட்டு விட்டார். இந்த ஆண்டுக்குள் திருமணம் செய்து கொள்ளவும் திட்டமிட்டு உள்ளார்.

ஸ்ரீ வித்தியா, சில்க் சுமிதா, மனோரமா, கமலாகாமேஷ், சரத்பாபு, வெ. ஆ. மூர்த்தி மற்றும் பலர் நடித்து இருக்கும் இதன் வசனத்தை மகேந்திரன் எழுத, இளையராஜா இசை அமைக்க, பி. ஆர். ரவி சங்கர் இயக்கி உள்ளார்.

(ஜூ—10)

# ரூ. 20 கோடி கொண்ட ஆண்டொன்றிற்கு 14 சதவீத இலங்கை மத்திய வங்கியினது ஆறுமாத பிணைகளின் ஏல விற்பனை

நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 91 (1) (ஆ) பிரிவிற்கிணங்க இலங்கை மத்திய வங்கி தனது சொந்தப் பிணைகளில் ரூ. 20 கோடி கொண்ட தொகையினை ஏலம் மூலம் விற்பனைக்கு வழங்கவுள்ளது. இது முற்றாக மாற்றக் கூடியதும், புறக்குறிப்பிடுவதன் மூலம் கைமாற்றப்படக் கூடியதும், 6 மாத முதிர்வுக் காலத்தைக் கொண்டதும், ஆண்டுக்கு 14 சத வீத வட்டியைக் கொண்டதுமாகும். இப் பிணைகளைக் கொள்வனவு செய்வதற்கான கேள்வி விலைக் குறிப்புகள் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் மேற்பார்வையாளரினால் 1984 யூன் 27 புதன்கிழமை நண்பகல் 12 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும்.

கேள்வி விலைக் குறிப்புகள் மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தில், வர்த்தக வங்கிகளில் அல்லது கொழும்புத் தரகர் சங்கத்தின் உறுப்பினராகவுள்ள பங்குத் தொகுதித் தரகர்களிடமிருந்து கிடைக்கத்தக்கதாகவுள்ள படிவங்களில் அனுப்பப்பட வேண்டும். வர்த்தக வங்கிகள் தவிர்ந்த ஏனைய கேள்வியாளர்கள் தமது கேள்விக் குறிப்புகளை வர்த்தக வங்கிகள் அல்லது பங்குத் தொகுதித் தரகர்கள் மூலமாகச் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அத்தகைய கேள்விக் குறிப்புகள் கேள்வி விலைக் குறிப்புப் படிவத்தில் காட்டப்பட்டவாறு அவ்வர்த்தக வங்கி அல்லது பங்குத்தொகுதித் தரகரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். கேள்வி விலைக் குறிப்புக்களை முத்திரை பொறிக்கப்பட்டதும், பொதுப்படுகடன் மேற்பார்வையாளர், இலங்கை மத்திய வங்கி, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு-1 என்ற முகவரியையுடையதும், வெளிப் பக்கத்தில், "மத்திய வங்கிப் பிணைகளுக்கான கேள்வி விலை குறிப்பு" எனக் குறிப்பிடப்பட்டதுமான உறையில் இடப்பட்டு கொழும்பு-1, மத்திய வங்கிக் கட்டடத்தின் தென் கோபுரத்தில் 2ஆம் மாடியில் உள்ள பொதுப்படுகடன் திணைக்களத்தில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டியில் இடப்படுதல் வேண்டும். கேள்வி விலைக் குறிப்புகள் 1984 யூன் 27, புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்னர் இடப்பட வேண்டும். எல்லா கேள்வி விலைக் குறிப்புகளும் உறுதியானவையும், மாற்ற முடியாதவையுமாகும்.

எல்லா வங்கித் தொழில் நிறுவனங்களும் (தேசிய சேமிப்பு வங்கி நீங்கலாக) கூட்டு நிலையங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், தொழில் முயற்சிகள், அமைப்புக்கள், சட்ட ரீதியாக அமைக்கப்பட்ட நம்பிக்கை நிறுவனங்களும், நிதியங்களும் (ஊழியர் நம்பிக்கை நிதியம், ஊழியர் சேம நிதியம் என்பன நீங்கலாக) சட்டத்துறை சார்ந்த தனியாட்கள் என்போர் இப்பிணைகளில் முதலீடு செய்யலாம். அரச திணைக்களங்கள் இப்பிணைகளில் முதலீடு செய்யத் தகுதி வாய்ந்தவையல்ல.

பிணைகளின் முகப்புப் பெறுமதி ரூ. 1,000/-இன் பெருக்கங்களாகவும், பிணை ஒன்றின் ஆகக் குறைந்த முகப்புப் பெறுமதி ரூ. 10,000/- ஆகவும் இருக்கும். பிணைகள் ஆண்டு ஒன்றுக்கு 14 சத வீத வட்டி வீதத்தைக் கொண்டிருப்பதுடன், இது முதிர்வுக் காலப் பெறுமதியுடன் சேர்த்துச் செலுத்தப்படும். பிணைகளின் கொள்வனவு விலை பிணைகள் மீதான பெறுகையைத் தீர்மானிக்கும். தாம் எதிர்பார்க்கும் பெறுகையின் அடிப்படையிலே கேள்வி விலையைக் குறிப்பிட விரும்பும் முதலீட்டாளர்களுக்கு உதவி புரியும் முறையில் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களம், "முதிர்விற்கான பெறுகை" என்ற அட்டவணையை எல்லா வர்த்தக வங்கிகளிடமும், ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்குத்தொகுதித் தரகர்களிடமும் வழங்கியுள்ளது. ஏலவிற்பனையில் கேள்வி விலைகளைக் குறிப்பிட விரும்பாதோர், தாம் கொள்வனவு செய்ய விரும்பும் பிணைகளின் தொகையினைக் குறிப்பிட்டால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வி விலைகளினால் தீர்மானிக்கப்பட்டு கணிக்கப்பட்ட விலையில் ஒதுக்கீட்டைச் செய்யலாம்.

ஏற்றுக் கொள்ளப்பட்ட விலை குறிப்புகளின் கேள்வியாளருக்கு விலைக் குறிப்புகள் ஏற்றுக் கொள்ளப்பட்டமை பற்றிய கடிதங்கள் வழங்கப்படும். ஏற்றுக் கொள்ளப்பட்ட விலைக் குறிப்புகள் தொடர்பாகச் செலுத்தப்பட வேண்டிய கொடுப்பனவுகள், ஏற்றுக் கொள்ளப்பட்டது பற்றிய கடிதத்தில் குறிப்பிடப்பட்ட தேதியில் மு. ப. 9இற்கு முன்னராக மத்திய வங்கிப் பிணைகள் கணக்கில் என்று குறிப்பிடப்பட்டு இலங்கை மத்திய வங்கியின் சார்பில் வரையப்பட்ட காசோலை மூலம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். அத்தகைய காசோலைகள் பொதுப்படுகடன் திணைக்களத்திற்கு அனுப்பப்படுதல் வேண்டும். தகுதி பெற்ற கேள்வியாளருக்கு கொடுப்பனவாகக் கிடைக்கப் பெற்ற காசோலையின் பெறுமதி அறவிடப்பட்ட பின்னர் உடனடியாகப் பிணைகள் வழங்கப்படும்.

விலைக் குறிப்புகள் ஏற்றுக்கொள்ளப்படாத கேள்வியாளருக்கு விலைக் குறிப்புகள் நிராகரிக்கப்பட்டமை பற்றிய கடிதங்கள் வழங்கப்படும். எந்த ஒரு அல்லது எல்லா கேள்வி விலைக் குறிப்புகளையும் ஏற்காது விடுவதற்கான அதிகாரத்தை இலங்கை மத்திய வங்கி கொண்டுள்ளது.

பிணைகள் வருமான வரிக்கு உட்பட்டவையாகும்.

மத்திய வங்கிப் பிணைகளின் வழங்கல் மீளக் கொடுப்பனவுகள் என்பன தொடர்பான எல்லா விடயங்களிலும் இலங்கை மத்திய வங்கியின் தீர்மானமே முடிவானதாகும்.

இப்பிணைகளின் வழங்கல் மீளக் கொடுப்பனவுகள் தொடர்பான ஏனைய எல்லா நியதிகளும், நிபந்தனைகளும் பொதுப்படுகடன் திணைக்களம், வர்த்தக வங்கிகள் அல்லது ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்குத் தொகுதித் தரகர்களிடமிருந்து பெறப்படலாம்.

பொதுப்படுகடன் மேற்பார்வையாளர்.

பொதுப்படுகடன் திணைக்களம்,
இலங்கை மத்திய வங்கி,
கொழும்பு.
15 யூன் 1984.

தினபதி

தொலைபேசி:
23882, 23884, 23864
தந்தி: "தினபதி" கொழும்பு
தபால் பெட்டி இல. 1613
5, குணசேன மாவத்தை,
கொழும்பு — 12.

22 — 6 — 1984
சுடர் 17 கதிர் 2708

## தேயிலை ஏற்றுமதி

இலங்கைத் தேயிலைக்கு உலக நாடுகளில் இப்போது நல்ல விலை கிடைக்கிறது.

தேயிலை உற்பத்தியாளர்களும் ஏற்றுமதியாளர்களும் இந்த நிலைமையைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

பலர் தரம் குறைந்த தேயிலையை பெட்டிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு அனுப்புகிறார்கள்.

இப்படிப்பட்டவர்களை கடுமையாக எச்சரிக்கை செய்திருக்கிறார் பெரும் தோட்டத் தொழில் துறை அமைச்சர் மேஜர் மொண்டேகு ஜெயவிக்ரம.

அவர்களுடைய ஏற்றுமதி அனுமதிப் பத்திரம் ரத்துச் செய்யப்படும் என்று அமைச்சர் கண்டிப்பாகத் தெரிவித்திருக்கிறார்.

தரம் குறைந்த தேயிலையை ஏற்றுமதி செய்பவர்களின் ஏற்றுமதி அனுமதிப் பத்திரத்தை ரத்துச் செய்வது போதுமான தண்டனை ஆகாது.

வர்த்தக மோசடிக் குற்றச்சாட்டின் பேரில் அவர்களை நீதிமன்ற விசாரணைக்கும் உட்படுத்த வேண்டும்.

ஏனெனில் வெளிநாடுகளுக்கு அனுப்பும் தேயிலையில் மோசடி செய்வது நாட்டுக்குத் துரோகம் இழைப்பது ஆகும்.

இலங்கைக்கு ஆகக் கூடுதலான அந்நியச் செலாவணியை ஈட்டித் தரும் பொருள் தேயிலை தான்.

தேயிலையே இந்த நாட்டுப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு என்று சொல்லலாம்.

இலங்கைத் தேயிலைக்கு இன்று நேற்றல்ல, நீண்ட

# இறைவனை அடைய நேரான பாதை பக்தி

## அது அழியாத பேரின்பம் தருவது

பக்தி, அபர பக்தி பரபக்தி — கீழ்த்தரமான பக்தி மேலான பக்தி என இரு வகைப்படும். அபர பக்தி சற்றுத் தாழ்ந்த பக்தி நெறியாகும்.

அபர பக்தியில் பக்தன் புதிய மாணவனுவான். அவன் சடங்குகளையும் கிரியானுஷ்டானங்களையும் மேற்கொள்வான். அவனுக்கு விரிந்த உள்ளம் கிடையாது. அவன் ஒரு மதாபிமானி. பிற தெய்வங்களை வணங்கும் பக்த கூட்டத்தினரை அவன் வெறுப்பான்.

பரபக்தி நெறியை மேற்கொள்ளும் மேலான பக்தன் எல்லாந் தழுவுபவன். எல்லாம் உள்ளடங்கப் பெற்றவன். உலகந் தழுவிய அன்பு அவன்பால் உண்டு. அவன் வழிபடுதற்கெனக் கோவில்களுக்குச் செல்வதில்லை.

எப்பொருளிலும் இறைவனைக் காண்பான். இறைவனின் மறு தோற்றமே உலகமெனவும், செயல்கள் இயக்கங்கள் யாவும் அவனது லீலைகளே எனவும் கருதுவான். அவனுக்கு அழுக்கிலோ, தாழ்குலச் சண்டாளனிலோ, தோட்டியிலோ, பிச்சைக்காரனிலோ, பரத்தையிலோ திருடனிலோ, வெறுப்பு ஏற்படுவதில்லை.

"எவ்விடத்திலும் என் இனிய பரம்பொருளையே காண்கிறேன். பரத்தை, திருடன், கொள்ளைக்காரன், தோட்டியாக நடிப்பவன் ஹரியே!" எனக் கூறுவான்.

அவன் எல்லாந் தழுவிய, எல்லாம் உள்ளமையப் பெற்ற உயர்ந்த மனுநிலையைப் பெற்றவன். வார்த்தைகளினால் இவனது நிலையைத் தெளிவாக விளக்க முடியாது.

### வெள்ளி விருந்து

அந்நிலை உரைப்பட வேண்டியதொன்றாகும். மீரா, கௌரங்கா, ஹபீஸ், துளசிதாஸ், கபீர், இராமதாஸ் ஆகிய எல்லோரும் இந்நிலையை நுகர்ந்தனர்.

நாமதேவர் என்பார் தனது நாயைப் பார்த்து, "நாய் வடிவில் வந்த என் அன்ப! வித்தலா! காய்ந்த ரொட்டித் துண்டுடன் ஓடிவிடாதே. உனது மென்மையான மிடற்றினை அது உறுத்தும். அந்த ரொட்டித் துண்டுக்கு வெண்ணெய் பூச அனுமதிப்பாயாக" என்றாராம். வெண்ணெய்க் கிண்ணத்துடன் நாயைத் தொடர்ந்து சென்றார் அவர்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் சாதிப்பிரஷ்டம் செய்யப்பட்ட சிறுமி ஒருத்தியின் பாதங்களில் வீழ்ந்து, "காளி மாதாவே! இச்சிறுமியில் உன்னையே காண்கிறேன்" என்றார்.

ஏகநாத் என அழைக்கப்பட்ட மகாராஷ்டிர பக்தர் ஒருவர்; தனது வீட்டிற் புகுந்து கொண்ட ஒரு திருடனுக்குத் தனது கணையாழியை தாமாகவே வழங்கினார்.

அவர், "ஓ திருடனே! இம் மோதிரத்தையும் ஏற்றுக் கொள். பொருட்களைத் திருடுவதல்லவா உனது தர்மம்? ஸ்ரீ கிருஷ்ணன் நீயே! இந்த லீலையை ஒருபொழுதும் கைவிடாதே!" என்றாராம்.

புதிய கோணப் பார்வை பெற்ற இச்சிறந்த பக்தர்களின் உயர்ந்த நிலையைப் புரிந்து கொண்டீர்களா? உங்களுக்கும் அத்தகைய ஒரு நாள் வரும். முயற்சி செய்யுங்கள். போராடுங்கள்.

ஞானமே பரபக்தியாகும். ஞானமும் பரபக்தியும் ஒன்றே. பூரண அத்துவித ஞானியாக விளங்கிய ஸ்ரீ சங்கரர் அவர்கள் அரன், அரி, தேவி ஆகியோரை வழிபட்ட ஒரு சிறந்த பக்தர்.

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் காளிதேவியை வணங்கித் தனது அத்வைத குருவாய் விளங்கிய சுவாமி தோதாபுரி அவர்களின் உதவியினால் ஞானம் பெற்றார். தென் இந்தியாவின் புகழ் பெற்ற ஞானி அப்பைய தீக்ஷிதர் அவர்கள் சிறந்த ஒரு சிவபக்தன்.

பரபக்தியும் ஞானமும் ஒன்றே. ஆனால், அமைந்து கிடக்கும் ஒரு சிறு வேற்றுமை யாதெனில் ஒரு பக்தன் தன் உணர்ச்சியைத் துணைக் கொள்வான். ஆனால் ஒரு ஞானி தனது அறிவாற்றலையும் உள ஆற்றலையும் பயன்படுத்துவான்.

அன்பிலிருந்து தோன்றுவது பக்தி. ஞானம் சிந்திக்கும் இயல்பு, தன் ஆராய்வு ஆகியவற்றிலிருந்து பிறப்பது. ஆனால் இரண்டிற்கும் முடிவு ஒன்றே. இறைவனுடன் ஒன்றாய் இணைதலே அம் முடிவு.

ஒடுங்கும் இயல்பு ஒரு பக்தனுக்கு உண்டு. ஆனால் ஒரு வேதாந்தி விரிவடைபவன். பக்தன் குவிந்து சுய அர்ப்பணம் செய்வதன் மூலம் இறைவனை அடைவான். ஒரு வேதாந்தி விரிவடைந்து, து ணிவுரையினாலும் இறைவனும் ஆன்மாவும் ஒன்றேயென உணர்வதனாலும் பரப்பிரமத்துடன் ஒன்றுபடுவான்.

பக்தியின் பேறு ஞானம். ஞானம் பக்தியினை மேலும் வளர்க்கும் சங்கரர், மதுசூதனன், சுகதேவர் ஆதியாம் ஞானிகள் கூடப் பேருண்மையை உணர்ந்த பின்னரும் இறைவனுடன் கொள்ளும் பேரன்புத் தொடர்பின் இனிமையை நுகர்தற்காகப் பக்தியை நாடினர்.

பக்தியோகத்தைக் கடைப்பிடிப்பீர்களானால் அறிவும் ஞானமும் தாமாகவே உதயமாகும். இறைவனை அடைதற்கு உதவும் நேரான, அழுத்தமான மகிழ்ச்சிகரமான பாதை பக்தி.

தொடக்கத்திலும், இடையிலும், முடிவிலும் பக்தி இனிமை பயக்கும். என்றும் அழியாத, மிக்குயர்ந்த பேரின்பத்தை நல்குவது அது.

இறைவனின் இராச்சியத்தை அடைய உதவும் சுலபமான பாதை பக்தியாதலின் இதயத்தில் தெய்வீக அன்பாம் தீபத்தை ஏற்றுங்கள்.

[சுவாமி சிவானந்தர் அருளுரையிலிருந்து] (ல)

# சைவாலய கிரியைகளுக்கு பெருமை சேர்த்த பெரியார்

## இணுவில் சிவஸ்ரீ இராமநாதக் குருக்கள்

நினைவு தின விழா இன்று

சொன்னமை செய்யாமையினும் எனபதற்கேற்ப, ஆகமத்தில் சொல்லப்படாதவற்றை, செய்ய முன் வர மாட்டார். சொன்



## செய்தித் திரட்டு

### சிறுவன் மரணம்

வெலிகாமம், ஜூன் 21

நித்திரை செய்து கொண்டு இருந்த ஏழு வயது சிறுவன் பாம்பு கடித்து பரிதாபகரமாக மரணமானான்.

இம்மரணம் தொடர்பாக வலஸ்முல்ல திடீர் மரண விசாரணை அதிகாரி திரு. வீ. ஏ. ஜினதாஸ விசாரணைகளை நடத்தினார். (ல—331)

### நடவடிக்கை

தலைமன்னார், ஜூன் 21

1982, அக்டோபர் மாதம் நடைபெற்ற இலங்கை கல்விச் சேவை 5 ஆம் தரத்துக்கான போட்டிப் பரீட்சையில் சித்தியடைந்து நியமனம் பெற்றோரை, பதவியில் உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டிருக்கிறது.

இது தொடர்பான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ளுமாறு பிராந்திய கல்வித் திணைக்களங்களைக் கல்வி அமைச்சு சுற்றறிக்கை மூலம் கேட்டிருக்கிறது. (ல—286)

### கூட்டம்

கொட்டகலை, ஜூன் 21

மலையக கலை இலக்கியப் பேரொளி மன்றத்தின் மத்திய குழுக் கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு கொட்டகலையில் நடைபெறும். இத்தகவலை மன்றத்தின் அவைத் தலைவர் திரு. சோமசுந்தரம் தெரிவித்தார். (ல—164)

### பொங்கல் விழா

பேசாலை, ஜூன் 21

மன்னார் — தாராபுரம் தென்னை அபிவிருத்தி மாதிரிக் கிராம விவசாயிகள் கூட்டம் தாராபுரம் அல்மினு மகா வித்தியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

வித்தியாலய அதிபர் ஜனப் எம். சித்திக் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது. (ல—251)

### அபராதம்

வெலிகாமம், ஜூன் 21

லாம்.

இலங்கைத் தேயிலைக்கு இன்று நேற்றல்ல, நீண்ட காலமாகவே உலக நாடுகளில் நல்ல பெயர் இருந்து வருகிறது.

தரமான தேயிலையை அனுப்பிப் பெற்ற பெயர் இது.

ஒரு சில மோசடிக்காரர்கள் இதைக் கெடுக்க இடமளிக்கலாமா?

இலங்கைத் தேயிலைக்கு இன்று போட்டி அதிகம். இந்தியாவும் மற்றும் பல நாடுகளும் தேயிலை உற்பத்தியில் பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளன.

தரம் குறைந்த இலங்கைத் தேயிலை தொடர்ந்து வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டுமானால் அந்த நாடுகள் இலங்கைத் தேயிலையை நாடமாட்டா. வேறு நாடுகளிலிருந்து நல்ல தரமான தேயிலையை வாங்கத் தொடங்கும்.

இப்படி நடந்தால் எமது அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம் குறைந்து விடும். அவ்வளவோடு விஷயம் நிற்காது. தேயிலை வர்த்தகமே படுத்து விடும்.

இந்த ஆபத்தை முன் கூட்டியே உணர்ந்து தரம் குறைந்த தேயிலையை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்பவர்களைத் தண்டிக்க அமைச்சர் முன் வந்திருக்கிறார். அது பாராட்டுக்கு உரியது.

அமைச்சர் மொண்டேகு ஜெயவிக்ரம மற்றொரு நல்ல நடவடிக்கையையும் எடுக்க இருக்கிறார்.

உள்ளூரில் பாவனையாளர்களுக்கு நல்ல தேயிலை குறைந்த விலையில் கிடைக்கச் செய்யப் போகிறார் அமைச்சர்.

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை, அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம், தேசிய சிறு கைத்தொழில் அதிகார சபை ஆகிய மூன்றும் இணைந்து நல்ல தேயிலையை பைக்கட்டுகளில் அடைத்து விற்பனைக்கு விடப் போகின்றன.

கூட்டுறவுச் சங்கங்கள், கூட்டுறவு மொத்த விற்பனை நிலையக் கிளைகள், சந்தைப்படுத்தும் திணைக்களக் கடைகள், மார்க்பெட் நிறுவனத்தின் கடைகள் ஆகியவை இந்தப் பைக்கட்டுத் தேயிலையை விற்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

விலை குறிக்கப்பட்ட இந்த தேயிலைப் பைக்கட்டுகள் தனியார் கடைகளிலும் கிடைக்குமானால் பொதுமக்களுக்கு வசதியாக இருக்கும்.

# இணுவில் சைவ[illegible] இராமநாதக் குருக்கள் நினைவு தின விழா இன்று

இணுவில் கந்த சுவாமி கோவில் பிரதம குருவாக இருந்து அமரான சிவஸ்ரீ இராமநாதக் குருக்களின் ஓராண்டு நினைவு தினம் இன்றாகும். அதை முன்னிட்டு இக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.

**— விஸ்வ நாராயண சர்மா —**

சைவாலயக் கிரியைகளின் புனிதமும் அவற்றின் விளக்கங்களும் அருகி வந்த கால கட்டங்களில் வேதாகம நெறிகளில் பயிற்சியும், ஆற்றலும் மிக்க சிவாச்சாரியார்கள் காலத்திற்கு காலம் தோன்றியிருக்கிறார்கள்.

இந்து மத தத்துவங்களை யாரும், எச்சமயத்தவரும் எம்மொழி பயின்றோரும் கற்று உணரலாம்.

ஆனால் அதனை செயல் முறைப் படுத்துவோர் ஆதி சைவ மரபில் உதித்த அந்தணப் பெருமக்கள் மாத்திரமே. அத்தனை எல்லாப் பாகங்களிலும் கும்பாபிஷேகம் என்கிற மத வைபவத்தை பிரதம குருவாக இருந்து நடத்தியவர்.

குருக்களின் தனிச் சிறப்பு அவருடைய நித்திய கர்மானுஷ்டானம் ஆகும். அவர் இருக்குமிடமெல்லாம் அவரின் சிவ பூசை மணி கேட்ட வண்ணமே இருக்கும்.

மதிப்பு வாய்ந்த ஒரு குருவாக நம்காலத்தில் தோன்றி மறைந்த பெரியார் தான் இணுவில் சிவஸ்ரீ கு. இராமநாத குருக்கள்.

இலங்கையில் மட்டுமன்றி, இந்தியா, மலேஷியா போன்ற நாடுகளிலும் சமயத் தொண்டாற்றிய இவர். இலங்கையின்

சிவபூஜா துரந்தரர் ஆனாலும் இவர் அம்பாளின் வழிபாட்டில் தன் வாழ் நாளையே அர்ப்பணித்து வாழ்ந்தவர்.

"அல்லற்க செய்யினும் சொன்னமை செய்யாமையினும் என்பதற்கேற்ப, ஆகமத்தில் சொல்லப்படாதவற்றை, செய்ய முன் வர மாட்டார். சொன்னதை செய்யாமல் விடவும் மாட்டார். இதனை அவர் தொண்டாற்றல் அறிந்த ஈழம் வாழ் சைவ மக்கள் அனைவரும் அறிவர்.

இவரின் சேவை நலன் பேணி இவரை நாடிவந்த பட்டங்கள், பதவிகள் அனைத்தையும் துறந்தார். சிவன் சேவையே தம் சேவை என வாழ்ந்து காட்டிய இவர், தேடி வந்த பட்டம், பதவிகளை பெரிதாக மதிக்கவில்லை.

கோவில் வைபவங்கள் யாவற்றிற்கும் சரியான வழிமுறை கூறும் ஒரு புத்தகமாக கிரியா விளக்கங்களில் ஒரு சிறந்த உதாரண புருஷராக, சந்தேகங்களைத் தீர்ப்பதில் ஒரு தர்க்கவாதியாக, சைவ



இராமநாதக் குருக்கள்

சமய நூல் அறிவில் ஒரு பண்டிதராக அவற்றை எடுத்துக் கூறும் பாங்கில் நல்லாசிரியனாக வாழ்க்கையில் காலம் தவறாத கடிகாரமாக வாழ்ந்தார்.

சிறந்த குருவுக்கு அடையாளம் உத்தம சிஷ்ய பரம்பரை ஆகும். இவ்வகையில் ஏராளமான சிறந்த, ஆற்றல் மிக்க சிஷ்யர்களை உருவாக்கிய இவரின் சிறப்பை வர்ணிக்க வார்த்தைகளே கிடையாது.

இத்தகைய அளப்பரிய திறமைகளை தம் வசம் கொண்டு, சைவ சமய வளர்ச்சிக்கு அளப்பரிய சேவை ஆற்றிய பெருமை கொண்ட குருக்களை சைவ உலகம் என்றும் மறக்காது. (ல—ர)

# எல்லா மதங்களையும் கௌரவிக்கும் பண்பிருந்தால் ஐக்கியம் நிலைப்பது உறுதி

## போக்குவரத்து அமைச்சர் கருத்து

மாத்தறை, ஜூன் 21

எமது இளஞ் சந்ததியினரை நல்வழியில் இட்டுச் செல்ல அவர்களின் உள்ளங்களில் மத போதனைகளை இளம் பருவத்திலேயே ஊட்ட வேண்டும். எல்லா மதங்களையும் கௌரவிக்கும் பண்பு ஒவ்வொருவர் உள்ளத்திலும் துளிர் விட வேண்டும். அப்போது தான் இனங்களுக்கிடையில் ஐக்கியமும் ஏற்படும்.

இவ்வாறு கூறினர் போக்குவரத்து, முஸ்லிம் அலுவல்கள் அமைச்சர் அல்ஹாஜ் எம். எச். முகம்மது.

மாத்தறை மந்தின்த பிரிவெனவில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினர்.

தம்ம பாடசாலைகளில் தொண்டர் ஆசிரியர்களாகக் கடமையாற்றும் ஆசிரியர்களுக்கு ஞாயிறு தோறும் மதப் பாடசாலைகளுக்கு சென்று வர இலவச சீசன் வழங்கும் முகமாக இந்த வைபவம் நடைபெற்றது.

மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்த ஆயிரக் கணக்கான தொண்டர் ஆசிரியர்கள் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

அமைச்சர் இங்கு தொடர்ந்து [illegible]

இந்நாட்டில் ஐக்கியத்தை ஏற்படுத்த ஒவ்வொரு பிரஜையும் தன்னாலான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். எல்லா மதங்களும் அகிம்சையைப் போதிக்கின்றன. அகிம்சை வழியில் நாம் எமது வாழ்க்கையை அமைத்துக் கொள்ள வேண்டும்.

இந்நாட்டில் சிங்கள, தமிழ் மக்களுடன் ஐக்கியமாக வாழ்வதையே முஸ்லிம்கள் விரும்புகின்றனர்.

தம்ம பாடசாலை ஆசிரியர்களை ஊக்குவிப்பதற்காகவே இலவச பஸ் சீசன்கள் வழங்கப் படுகின்றன.

இதனால் போக்குவரத்துச் சபைக்கு பல லட்சம் ரூபா நட்டமேற்பட்ட போதிலும், சிறந்த ஒழுக்கமுள்ள எதிர் கால பிரஜைகளை உருவாக்கும் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதால் இந்த நட்டத்தை நாம் பொருட்படுத்த மாட்டோம்.

— இவ்வாறு அவர் கூறினர். (எ—25)

# அனுராதபுரத்தில் 2 நூதனசாலைகள்

## பிரதமர் திறந்து வைப்பார்

கொழும்பு, ஜூன் 22

அனுராதபுரம் இசுருமுனி விகாரையிலும், மிகிந்தலையிலும் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் இரு நூதனசாலைகள், "கம் உதாவ" உற்சவத்தின் போது பிரதமர் திரு. ஆர். பிரேமதாசாவினால் திறந்து வைக்கப்படும்.

மேற்படி இரு நூதனசாலைகளும் சுவடிகள் திணைக்களத்தால் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றன.

பிரதமர் திரு. பிரேமதாசாவின் ஆலோசனையின் பேரில் "கம் உதாவ 84" வைபவத்தை முன்னிட்டு வெளியிடப்பட உள்ள முத்திரை வெளியீட்டு வைபவம் 23 ஆம் திகதி நடைபெறும்.

அனுராதபுரம் கம் உதாவ கண்காட்சிக்காக அமைக்கப்பட்டிருக்கும் தபால் அலுவலகத்திலேயே மேற்படி முத்திரை வெளியீட்டு வைபவம் நடைபெறும்.

தபால், தந்தி தொலைத் தொடர்புகள் அமைச்சர் திரு. டி. பி. விஜேதுங்க, வீடமைப்பு பிரதி அமைச்சர் திரு. இம்புலான ஆகியோரும் இந்த வைபவத்தில் கலந்து கொள்வர். ([illegible])

# திருவுருவம் திறப்பு விழா

கொழும்பு, ஜூன் 22

இணுவில் கந்தசுவாமி கோவிலின் பிரதம குரு அமரர் சிவஸ்ரீ இராமநாதக் குருக்களின் ஓராண்டு நினைவு தினத்தையொட்டி அவரது திருவுருவத் திறப்பு விழா இன்று 22 ஆம் திகதி காலை 11 மணியளவில் இணுவிலில் நடைபெறும்.

கோப்பாய் சிவஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் மேற்படி திருவுருவத்தை திரை நீக்கம் செய்து வைப்பார்.

அதனையடுத்து இணுவில் தர்ம தாஸ்தா குருகுல மாணவர்கள் திருவுருவத்திற்கு மலர் அஞ்சலி செய்வார்கள்.

இதனைத் தொடர்ந்து அந்தணப் பெரியார்களினதும் சைவப் பெரியார்களினதும் சிறப்புரைகள் இடம்பெறும். (ல)

# நேருவின் ஆட்சி: வலுவூட்ட குரல் கொடுத்த கலைஞர்

## மணிவிழாவில் உரை

பளை, ஜூன் 21

"சீனு அன்று இந்தியாவை ஆக்கிரமிக்கப் பார்த்த போது, டெல்லி இருந்தால் தான் சென்னை இருக்கும், இந்தியா இருந்தால் தான் தமிழ்நாடு இருக்குமெனச் சொல்லி, நேருவின் ஆட்சிக்கு வலுவூட்டி குரல் கொடுத்தவர் கலைஞர் கருணாநிதி."

சாவகச்சேரியில், அண்மையில் கலைஞர் கருணாநிதியின் 60 ஆவது பிறந்த தினத்தை ஒட்டி, நடத்தப்பட்ட மணிவிழாவுக்குத் தலைமை வகித்துப் பேசிய திரு. ஏ. பி. செல்லையா இவ்வாறு கூறினர்.

தென்மராட்சி முத்தமிழ்க் கலை மன்றத்தினால் இவ்விழா [illegible]

திரு. செல்லையா அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

"கலைஞர் 1957 ஆம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை சட்ட சபையில் சாதாரண பிரதிநிதியாக, முதலமைச்சராக, எதிர்க் கட்சித் தலைவராக இருந்து வருகிறார்.

கலைஞரைப் பற்றி அறியாதவர்கள் அவரைப் பிரிவினைவாதி என்கின்றனர்.

மாநில சுயாட்சியின் தனித்துவத்தைப் பேணுவதே கலைஞரின் நோக்கமாகும்."

இவ்வாறு அவர் கூறினர்.

இவ்விழாவில் ஆசிரியமணி ஆர். ரி. சுப்பிரமணியம், திரு. கே. கே. பிள்ளை உட்பட பலர் உரையாற்றினர்கள். ([illegible])

(ல—251)

## அபராதம்

வெலிகாமம், ஜூன் 21

சட்ட விரோதமாக 13 மாடுகளை லொறியில் ஏற்றிச் சென்ற இருவருக்கு வலஸ்முல்ல நீதியரசர் திரு. நிகால் குணதிலக ஒவ்வொருவருக்கும் ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார்.

வீரகெட்டிய பொலீஸ் இன்ஸ்பெக்டர் திரு. ஏ. டீ. எச். பந்துசேன, சார்ஜன்ட் திரு. சுமனசேன ஆகியோர் வலஸ்முல்ல நீதிமன்றத்தில் மேற்படி வழக்கைத் தாக்கல் செய்து இருந்தனர். (ல—331)

## விபத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

கல்வி பயிலச் சென்ற சிறுமி மினி பஸ் மோதி மரணமானர்.

உரும்பராயைச் சேர்ந்த யாழினி (9 வயது) என்ற சிறுமியே இவ்வாறு மரணமானர்.

யாழ். பதில் நீதிவான் திரு. எஸ். அமிர்தலிங்கம் மரண விசாரணை நடத்தினர்.

விபத்து மரணமெனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ல-120)

## திருட்டு

புங்குடுதீவு, ஜூன், 21

புங்குடுதீவில் தந்திக் கம்பித் திருட்டு அதிகரித்து வருகிறது.

பல ஆயிரக் கணக்கான ரூபா பெறுமதியான தந்திக் கம்பிகள் கம்பங்களில் இருந்து துண்டிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் ஊர்காவற்றுறைப் பொலீஸார் தந்திக் கம்பிகளுடன் காணப்பட்ட இரு இளைஞர்களைக் கைது செய்தனர்.

சட்ட விரோதமான முறையில் மின் இணைப்புப் பெறவும் டி.வி. படக்காட்சிகள் காண்பிப்பதற்கும் இவை பயன்படுத்தப் படுவதாகக் கூறப்படுகிறது. (ல-240)

## தரமுயர்வு

முல்லைத்தீவு, ஜூன் 21

முல்லைத்தீவு, கோட்டை கட்டின குளம், தமிழ் கலவன் பாடசாலையில் இவ் வருட முதல் இரண்டாந் தரப் பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டது.

இப்பாடசாலை அதிபர் திரு. ந. பரமானந்தன், முல்லைத்தீவுக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டதையடுத்து, கல்விப் பணிப்பாளர் ஜனப் எம். எம். மன்சூர் இந்த நடவடிக்கையை எடுத்தார். (ல—1[illegible])

# வங்காள தேசத்திலும் இந்தியாவிலும் பெரு மழை

## வெள்ளத்தில் 200 பேர் பலி

## பாகிஸ்தானில் கடும் வெப்பம் 30 பேர் உயிரிழப்பு

டாக்கா, ஜூன் 21

**வங்காள தேசத்திலும், இந்தியாவிலும் நேற்று பலத்த மழை பெய்தது. இதனுல் பெரும் வெள்ளம் ஏற்பட்டது. இந்த வாரம் தொடர்ந்து பெய்து வரும் மழையினுல் ஏற்பட்ட வெள்ளத்தில் இந்தியாவில் 46 பேரும், வங்காள தேசத்தில் 145 பேரும் இறந்துள்ளனர். இதே வேளை பாகிஸ்தானில் கடந்த மாதம் வெப்பத்தின் உக்கிரத்தினுல் 30 பேர் இறந்துள்ளனர்.**

இதேவேளை பாகிஸ்தானில் வெப்ப உக்கிரம் காரணமாக 30 பேர் கடந்த மாதம் உயிரிழந்துள்ளனர். மின்சாரப் பற்ருக்குறை காரணமாக தொலைபேசி ஒளிபரப்புகள் குறைக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒரு மாதமாக பெய்து வரும் பெரும் மழை வங்காள தேசத்தில் அரசியல் பிரச்சினைகளையும் தோற்றுவித்துள்ளது.

வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண வேலைகளை உடனடியாக மேற்கொள்ளுமாறு வங்காளதேச ஜனதிபதி மொஹம்மட் ஹேர்சாத் உத்தரவிட்டுள்ளார்.

ஆனுல் இதுவரை அரசாங்கம் வெள்ள அகதிகளுக்காக நிவாரண வேலைகளை சரிவர மேற்கொள்ளவில்லையெனவும், அத்தியாவசியப் பொருட்கள் விநியோகம் சரிவர நடத்தப்படவில்லையெனவும் எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

வெள்ளத்தினுல் தேயிலைத் தோட்டங்கள் நிறைந்த சைலட் மாவட்டம் வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது இங்கு சுமார் 1 லட்சம் பேர் வீடுகளை இழந்துள்ளனர்.

கடந்த மாதம் ஏற்பட்ட வெள்ளத்தில் 1 லட்சம் தொன் அரிசி நாசமாக்கப்பட்டதாக அதிகாரபூர்வ அறிக்கைகள் கூறுகின்றன.

தாய்லாந்து, பர்மா ஆகிய நாடுகளில் இருந்து 4,65,000 தொன் அரிசியை வங்காள தேசம் இறக்குமதி செய்யவுள்ளது. 100 லட்சம் தொன் அரிசியைச் சேமித்து வைக்கும் திட்டத்துடனேயே இந்த இறக்குமதி மேற்கொள்ளப்படுகிறது. வங்காளதேச விவசாய அமைச்சர் அப்துல் கபூர் மஹமூட் இதனைத் தெரிவித்தார்.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் கடந்த வாரம் மழையினுல் 34 பேர் உயிரிழந்தனர். 1 லட்சம் பேர் வீடிழந்தனர்.

அஸ்ஸாமில் பிரம்மபுத்திரா நதி பெருக்கெடுத்தோடிய போது நூற்றுக் கணக்கான குடிசைகள் வெள்ளத்தினுல் அடித்துச் செல்லப்பட்டன.

திரிபுராவில் ஏற்பட்ட மண் சரிவொன்றில் 12 பேர் உயிரிழந்தனர்.

கடந்த மாதம் திரிபுராவில் ஏற்பட்ட வெள்ளத்தினுல் தேயிலைத் தோட்டங்களும், வயல்களும் பெரும் பாதிப்புக்குள்ளாகின. இதனுல் 20 கோடி ரூபாய்க்கு மேல் நட்டமேற்பட்டதாக திரிபுரா அரசாங்க அறிக்கைகள் கூறுகின்றன.

இதே வேளை பாகிஸ்தானில் வெப்பத்தின் உக்கிரம் தாங்க முடியாமல் இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

கராச்சியில் மின்சார வெட்டு ஏற்பட்டதன் காரணமாக தொலைக்காட்சி சேவைகள் இரவு 7 மணி முதல் 10 மணி வரை நிறுத்தப்பட்டுள்ளன.

வெப்பத்தின் காரணமாக குளிரூட்ட வசதிகளுக்காக அதிக மின்சாரம் தேவைப்பட்டதாலேயே இந்த பற்ருக்குறை ஏற்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் புனித மாதமான ரம்ழான் மாதத்தில் இந்த வெப்ப உக்கிரம் பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ளது. இந்தக் காலத்தில் முஸ்லிம்கள் நோன்பு விரதத்தை மேற்கொள்வர்.

(ந)

### வலதுசாரி கெரில்லாக்கள் கைது

கிராமப் புறங்களிலுள்ள கெரில்லாக்களை தேடி பொலீஸார் நடத்திய முற்றுகையொன்றில் 35 பேர் கைது செய்யப்பட்டனர். ஏராளமான ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டன.

எப். பி. 25 என்ற வலதுசாரி இயக்கத்தின் அங்கத்தினர்களே கைது செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தேடுதல் நடவடிக்கை தொடர்ந்து நடைபெறுமென பொலீஸார் கூறினர். (ந)

### வளைகுடா யுத்தமுனைக்கு 4000 ஈரானியர்

டெஹ்ரான், ஜூன் 21

4,000க்கும் அதிகமான தொண்டர்கள் டெஹ்ரானிலிருந்து வளைகுடா யுத்த முனைக்குப் பயணமானுர்கள்.

வெகு காலமாக எதிர்பார்க்கப்பட்டு வந்த ஈராக்குக்கெதிரான தரைத் தாக்குதல்களுக்கான நடவடிக்கைகளை ஈரான் மேற்கொண்டு வருவதையே இது காட்டுகிறது. (ந)



பிரிட்டனின் முடிக்குரிய இளவரசர் சார்ள்ஸின் மகனை இளவரசர் வில்லியம் டெலிவிஷன் காமிரா எப்படி இயங்குகிறது எனபதை அவதானததுடன நோக்குகிறுர். அவரது தந்தை இளவரசர் சார்ள்ஸ் அருகில் நிற்கிறுர். (ந)

### வியன்னுவில் துருக்கி தூதரகத்துக்கு வெளியே குண்டு வெடிப்பு

#### தூதரக ஊழியர் மரணம்; மூவர் காயம்

வியன்னு, ஜூன் 21

வியன்னுவில் உள்ள துருக்கிய தூதரகத்துக்கு வெளியே நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவமொன்றில் ஒருவர் கொல்லப்பட்டார். 3 பேர் காயமுற்றனர்.

கொல்லப்பட்டவர் தூதரக ஊழியர் எனக் கூறப்படுகிறது.

இந்தக் குண்டுத் தாக்குதல்களை நடத்தியவர்கள் யார் என்பது இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

ஆனுல் ஆர்மேனிய கெரில்லாக்கள் இதுவரை 40 துருக்கியர்களைக் கொலை செய்துள்ளனர். இவர்களில் அனேகமானேர் இராஜதந்திரிகளாகவோ அல்லது அவர்களது உறவினர்களாகவோ இருந்துள்ளனர்.

உலகம் முழுவதும் இவ்வித தாக்குதல்களை ஆர்மேனியக் கெரில்லாக்கள் நடத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்த நூற்றுண்டின் ஆரம்ப காலத்தில் துருக்கியில் ஆர்மேனியர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட துன்புறுத்தல்களுக்கு பழிவாங்கவே இவ்வித கொலைகளைச் செய்து வருவதாக ஆர்மேனிய கெரில்லாக்கள் கூறி வருகின்றனர்.

(ந)

குடிமக்கள் மீதான

உலகச்

பெற்றோர்கள்

இந்நிலையில் பாடசாலையின் நிர்வாகத்தைக் குறை கூறுவதும், விமர்சிப்பதும் பொருத்தமாகுமா?

# குடிமக்கள் மீதான தாக்குதல்களை கண்காணிக்க ஐ. நா. அவதானிகள்

டெஹ்ரான், ஜூன் 21

வளைகுடா யுத்தத்தின் போது குடிமக்கள் வசிக்கும் இடங்களில் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெருமல் இருப்பதை ஐ. நா. அவதானிகள் கண்காணிக்கவுள்ளனர். ஈரானின் பக்கத்திலிருந்து இந்த கண்காணிப்பை மேற்கொள்ளும் அவதானிகள் ஈரானில் நிறுத்தப்படமாட்டார்கள் என ஐ. நா. பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார்.

இந்த அவதானிகள் அருகில் உள்ள ஒரு நாட்டில் நிறுத்தி வைக்கப்பட்டு தேவையான போது ஈரானுக்கு வர வேண்டும் என ஈரான் தொடக்கத்தில் இருந்தே கூறிவந்துள்ளது.

இம்மாதம் முற்பகுதியில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல்களில் இரு நாட்டினதும் குடிமக்கள் நூற்றுக்கணக்கில் கொல்லப்பட்டனர்.

இது போன்ற தாக்குதல்களை நிறுத்துமாறு ஐ. நா. செயலாளர் நாயகம் கூறியுள்ளார்.

ஈராக்கின் பகுதியில் கண்காணிப்பை மேற்கொள்ளும் அவதானிகள் குழுவில் ஸ்வீடன், பின்லாந்து, அயர்லாந்து, ஆகிய நாட்டு இராணுவ அதிகாரிகளும், ஐ. நா. செயலாளர் நாயகத்தின் அரசியல் அலுவல்கள் செயலகத்தைச் சேர்ந்த சிரேஷ்ட இராணுவ அதிகாரி ஒருவரும் அடங்குவார்.

ஈரானின் பக்கத்திலிருந்து, அவதானிப்பதை மேற்கொள்ளும் குழுவில் ஸ்வீடன், அயர்லாந்து, ஆஸ்திரேலியா ஆகிய நாடுகளைச் சேர்ந்த இராணுவ அதிகாரிகள் அடங்குகின்றனர்.

(ந)

# அமெரிக்க விமான விற்பனைக்கு சீன கண்டனம்

பீகிங், ஜூன் 21

தாய்வானுக்கு 12 நவீன இராணுவ போக்குவரத்து விமானங்களை அமெரிக்கா விற்பனை செய்யவுள்ளது. இந்த விமான விற்பனையை சீன வன்மையாகக் கண்டித்துள்ளது. பீகிங்குடன் செய்து கொண்டுள்ள ஒப்பந்தத்திற்கு இந்த விற்பனை முரணாக அமைகிறது என சீன கூறியுள்ளது.

3250 லட்சம் டாலர் மதிப்புள்ள 12 விமானங்களை தாய்வானுக்கு விற்பனை செய்யப் போவதாக அமெரிக்கா கடந்த திங்கட்கிழமை அறிவித்தது.

சீனவுக்கு ஆயுதங்களை விற்பனை செய்யும் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட ஒரு வாரத்தின் பின்னர் இந்த அறிவிப்பு செய்யப்பட்டது.

சீனவின் சார்பாக சீன பாதுகாப்பு அமைச்சர் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டார்.

தாய்வானுக்கு விற்பனை செய்யப்படவுள்ள சி–130 ஹெர்குலிஸ் விமானங்கள் இதுவரை தாய்வானுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ள விமானங்களைப் பார்க்கிலும் அதிக தரம் கொண்டவை. அமெரிக்க ஆயுதங்களின் ஏற்றுமதிக் கட்டுப்பாடு தொடர்பாக சீனவும் அமெரிக்காவும் கூட்டாக 1982 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17 ஆம் திகதி செய்து கொண்ட ஒப்பந்தத்துக்கு இந்த விற்பனை முரணாக அமைகிறது.

இவ்வாறு சீனவின் வெளிநாட்டு அமைச்சின் பேச்சாளர் ஒருவர் செய்தி மாநாடு ஒன்றில் கூறினர்.

இந்த விமான விற்பனை மூலம் இப்பிரதேசத்தின் இராணுவ நிலைமையில் மாற்றமேற்படாது என அமெரிக்கா கூறியுள்ளது.

(ந)

# உலகச் செய்திகள்

# பாகிஸ்தானுக்கு மலேஷிய எரிபொருள்

கோலாலம்பூர், ஜூன் 21

மலேஷியாவிடமிருந்து டீசல், மண்ணெண்ணெய் ஆகிய எரிபொருள்களை வாங்குவதற்கு பாகிஸ்தான் விருப்பம் தெரிவித்துள்ளது.

மலேஷிய அமைச்சர் ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

மலேஷியாவிடம் டீசல், மண்ணெண்ணெய் ஆகியவை தேவைக்கு அதிகமாக உள்ளன. அதை பாகிஸ்தானுக்கு விற்பதில் மலேஷியா மகிழ்ச்சி கொள்கிறது. எந்த அளவு எண்ணெய் விற்பனைக்கு உள்ளது என்பதை என்னல் வெளிப்படுத்த முடியாது. ஏனெனில் இன்னும் விற்பனைப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன என்று அவர் கூறினர்.

அதற்கு முன் பெற்றோல், இயற்கை கனி வளங்கள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான பாகிஸ்தானிய அமைச்சரை அவர் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

பாகிஸ்தானுக்கும், மலேஷியாவுக்குமிடையே பல துறைகளில் தொழில் நுணுக்க முறைகளைப் பரிமாறிக் கொள்ள வாய்ப்பு உள்ளது முக்கியமாக பெற்றோல் எரிபொருள் தொழில் முறையில் என பாகிஸ்தானிய அமைச்சர் செய்தி மாநாடு ஒன்றில் கூறினர்.

பிரதம மந்திரி டடுக்சேரி மஹாதிர் மொகம்மட், மலேஷிய தேசிய எண்ணெய்க் கம்பெனியான பெட்ரோனஸ் ஸின் சிரேஷ்ட அதிகாரிகள் ஆகியோரையும் பாகிஸ்தானிய அமைச்சர் சந்தித்துப் பேசினர்.

(ந)

# இந்தியாவுக்கு வெளிநாட்டு உதவி, அதிகரிப்பு

பாரிஸ், ஜூன் 21

இந்தியாவின் பொருளாதாரக் கொள்கைகளை உலக வங்கியும், கடன் கொடுக்கும் மற்றைய மேற்கத்திய நாடுகளும் புகழ்ந்து கூறியுள்ளன. அத்துடன் வெளிநாட்டு உதவிகளில் 8.5 வீத அதிகரிப்பையும் வழங்க விருப்பம் தெரிவித்துள்ளன.

1984/1985 ஆம் வருடத்தில் அதிகாரபூர்வ உதவியாக 400 கோடி டாலர் உதவி இந்தியாவுக்கு வழங்கப்படும்.

கடந்த வருடம் 370 கோடி டாலர் உதவி வழங்கப்பட்டிருந்தது.

இந்திய வர்த்தக செயலாளர் பி. கே. கவுல் இதனை அறிவித்தார்.

இந்தியாவுக்கு கடன் வழங்கும் நாடுகளுடன் நடந்த, இரண்டு நாள் பேச்சுவார்த்தைகளின் பின்னர் இந்திய வர்த்தக செயலாளர் இவ்வாறு கூறினர்.

இந்த பேச்சு வார்த்தைகளுக்குத் தலைமை வகித்த உலக வங்கியின் சிரேஷ்ட அதிகாரி, இந்தியாவின் பொருளாதார வளர்ச்சி குறிப்பிடத்தக்கது என கூறினர்.

(ந)

# பெற்றோர்கள் மாதமொருமுறையேனும் பாடசாலைக்கு வரவேண்டும்

## பதில் அதிபர் ஆலோசனை

கொழும்பு, ஜூன் 21

"பெற்றோர் தம் பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை காட்ட வேண்டும், மாதத்தில் ஒரு தடவையாயினும் பாடசாலைக்கு வருகை தந்து பிள்ளைகளின் கல்வியில் தாம் கொண்டுள்ள அக்கறையை வெளிக்காட்ட வேண்டும்".

இவ்வாறு தெமட்டகொடை அரசினர் தமிழ் மகா வித்தியாலய பதில் அதிபர் திருமதி. என். கணேசன் குறிப்பிட்டார்.

மேற்படி வித்தியாலய அபிவிருத்தி சபையின் வருடாந்த பொதுக் கூட்டம் வித்தியாலய மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.

பிரஸ்தாப பாடசாலையின் முன்னள் அதிபர் திரு. என். கிருஷ்ணசாமி பொதுக் கூட்டத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அங்கு தொடர்ந்து பேசிய பதில் அதிபர் கூறியதாவது:—

வருடத்தில் ஒரு தடவையாவது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் கல்வி கற்கும் பாடசாலையை நாடி வருவது மிக மிக அரிதாகும்.

இந்நிலையில் பாடசாலையின் நிர்வாகத்தைக் குறை கூறுவதும், விமர்சிப்பதும் பொருத்தமாகுமா?

பாடசாலைகளை குறை கூறுவதை விடுத்து, பாடசாலையின் முன்னேற்றத்திற்காக பெற்றோர் அனைவரும் நேரில் வந்து தங்கள் பங்களிப்பைச் செலுத்த வேண்டுமென நான் மிகவும் பணிவாகக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறினர்.

இதையடுத்து அபிவிருத்திச் சபையின் நடப்பு வருடத்திற்கான நிர்வாகிகள் தெரிவும் நடைபெற்றது.

(எ—ர)

# தராவீஹ் தொழுகை

கொழும்பு, ஜூன் 22

கொழும்பு வாழைத் தோட்ட இஸ்லாமிய நலவுரிமைச் சங்கம், கடந்த நாலாண்டு காலமாக நடத்தி வரும், அப்பகுதி வாழ் முஸ்லிம் மாதர்களுக்கான "தராவீஹ்" தொழுகை இம்முறையும் நடத்தப்பட்டு வருகின்றது.

கொழும்பு மிகுந்து மாவத்தை முஸ்லிம் மகா வித்தியாலய மண்டபத்தில் மேற்படி "தராவீஹ்" தொழுகை நடத்தப்பட்டு வருகிறது.

அல்மஸ்ஜிதுல் முனீர் மஅல் மத்ரஸா பேஷ் இமாம் மௌலவி ஏ. டி. அருஸ் இதனை நடத்துகிருர்.

நாளை சனிக்கிழமை இரவு மேற்படி தராவீஹ் தொழுகையின் பின்னர் விஷேச ஹதீஸ் மஜ்லிஸ் ஒன்றையும் வாழைத் தோட்ட இஸ்லாமிய நலவுரிமைச் சங்கம் ஏற்பாடு செய்திருக்கிறது.

(எ–11)


# அரசாங்க அறிவித்தல்

## காணியுரிமை நிருணயக் கட்டளைச் சட்டம்

என். 529

வடமேல் மாகாணம், குருணுகல் மாவட்டம் ஹத்தலிஸ்பஹு — கிழக்கு, ஹத்தலிஸ்பஹு மேற்கு கோறளைகளில் அமைந்துள்ள, கீழ்க் காணப்படும் இலங்கை அளவைக் கிராமப் படங்களால் விவரிக்கப்பட்டு இதனடியிற் கூறப்பட்டுள்ள காணிகளுக்கு உரிமை கோரும் காணியுரிமை நிருணய அறிவித்தல்கள் 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 15 ஆம் திகதி பிரசுரமான 302 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

| நிருணய அறிவித்தல் இல. | கிராமம் | கோறளைப்பற்று | இ. அ. கி பட இல. |
|---|---|---|---|
| 5326 | கொக்வெவா | ஹத்தலிஸ்பஹு – மேற்கு | 3798 |
| 5327 | குடகவேவெவ | ஹத்தலிஸ்பஹு – கிழக்கு | 3837 |
| 5328 | உணகஸ்வெவ | ஷை | 3840 |
| 5329 | மணக்குளமயாகம | ஷை | 3845 |
| 5330 | வலஸ்வெவ | ஹத்தலிஸ்பஹு – மேற்கு | 3852 |
| 5331 | பொறெட்டுகடவெல | ஷை | 3853 |
| 5332 | பதங்கிவத்த | ஹத்தலிஸ்பஹு – கிழக்கு | 3888 |
| 5333 | வலத்வெவா | ஷை | 3890 |
| 5334 | கப்புவெகம | ஷை | 3893 |
| 5335 | தலுப்பொத்த | ஷை | 3895 |
| 5336 | ஹுன்னேகம | ஷை | 3898 |
| 5337 | ஹுணுகல்லேவ | ஷை | 3914 |
| 5338 | சின்னச்சாரியாகம | ஷை | 3916 |
| 5339 | கிரிபத்பெலஸ்ஸ | ஷை | 3918 |
| 5340 | ஏரியாவ | ஷை | 3919 |
| 5341 | கடவல | ஷை | 3925 |
| 5342 | கியுல்லேகம | ஷை | 3926 |
| 5343 | கொன்னகம | ஷை | 3956 |
| 5344 | மயிலகஸ்சாவ | ஷை | 3957 |
| 5345 | நவகதேகம | ஷை | 3967 |

மேலதிக விபரங்கள் தேவைப்படின் கீழ்க் கையொப்பமிட்டவருக்கு மனுச் செய்க.

கே. ஏ. டீ. பீ- போல்
உதவி உரித்துறுதி நிருணய ஆணையாளர்,
உதவி நிருணய உத்தியோகத்தர்.

காணியுரிமை நிருணயத் திணைக்களம்,
திருன்ஸ் வேக் சதுக்கம்,
யோக் வீதி,
கொழும்பு.

# 'லைலத்துல் கத்ர்' இரவில்

## அமல்களை அதிகரிப்போம்

அல்லாஹ்வின் அருள் மழை பொழியும் சிறப்பு மிக்க மாதம் ரமழான்.

வாழ் நாளெல்லாம் வல்லோன் வகுத்த வழியில் வாழும் நற்பயிற்சியை வழங்கும் வளம் மிக்க மாதம் ரமழான்.

ஆயிரம் மாதங்களைவிட அளப்பரிய சிறப்புடைய "லைலத்துல் கத்ர்" எனும் நள்ளிரவை தன்னகத்தே கொண்ட மாதம் ரமழான்.

ரமழானின் முத்திரை தினமான "லைலத்துல் கத்ர்" எனும் நன்னிரவைப் பற்றி அல்ஹாஜ் அல் குர்ஆனிலே பின்வருமாறு அறிவிக்கின்றான்:—

"நிச்சயமாக நாம் இ(ந்)த (குர்ஆ)னை (கண்ணியமிக்க) "லைலத்துல் கத்ர்" எனும் ஓர் இரவில் (முதலாவதாக) இறக்கி வைத்தோம்.

(நபியே!) அந்தக் கண்ணிய மிக்க இரவி(ன் மகிமையி)னை நீர் அறிவீரா?

கண்ணியமிக்க அந்த இரவு ஆயிரம் மாதங்களையும்விட மிக்க மேலானதாகும். அதில் மலக்குகளும் (ஜிப்ரீலாகிய பரிசுத்த) ஆவியும் தங்கள் இறைவனின் கட்டளையின் பேரில் (நடைபெற வேண்டிய) சகல காரியங்களுடன் இறங்குகின்றனர்.

— சாந்தி, சமாதானத்துடன் — (அவ்விரவு) "பஜ்ரு" (விடியற் காலை) உதயமாகும் வரை நீடிக்கிறது.

(97:1–5)

நபிகள் நாயகம் (ஸல்) பின் வருமாறு நவின்றுள்ளார்கள்:—

"லைலத்துல் கத்ர்" இரவை அல்லாஹ் என் உம்மத்தினர்களுக்கு மட்டுமே அருளினான். வேறு எந்த உம்மத்தினருக்கும் அருளவில்லை."

"ரமழான் மாதத்தில் ஓர் இரவு இருக்கிறது. அவ்விரவின் பயனை இழந்து விடுபவர், சகல பாக்கியங்களையும் இழந்த துர்ப் பாக்கியசாலியாவார்."

**— ரஷீத் எம். இம்தியாஸ் —**

இறை தூதர் (ஸல்) அவர்கள் இன்னும் இயம்பினார்கள்:—

"தூய நல்லெண்ணத்துடன், அல்லாஹ்வின் பொருத்தத்தையும், பிரதிபலனையும் நாடி "லைலத்துல் கத்ரை" வணக்கத்துடன் கழிப்பவரின் முன்னைய பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்படுகின்றன."

மகத்தான இந்த "லைலத்துல் கத்ர்" இரவிலே மறக்க முடியாத பல நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.

"லைலத்துல் கத்ர்" இரவில் மலக்குகள் படைக்கப்பட்டார்கள்; சுவர்க்கத்தில் விருட்சங்கள் நடப்பட்டன.

நபி ஈஸா (அலை) விண்ணுலகுக்கு உயர்த்தப்பட்டார்கள்; பனூ இஸ்ராயீல்களின் தெளபா அங்கீகரிக்கப்பட்டது.

அனைத்துக்கும் மேலாக அகிலத்தின் அருட் கொடையாம் அல் குர்ஆன், முதன் முதலில் அருளப்பட்டதும் இவ்விரவில் தான்.

நபி முஹம்மது (ஸல்) தொடர்ந்து கூறினார்கள்:—

"லைலத்துல் கத்ர்" இரவில் ஜிப்ரீல் (அலை) மலக்குகளின் ஒரு குழுவுடன் உலகுக்கு விஜயம் செய்கிறார்கள்.

அல்லாஹ்வின் திக்ரிலும், நல் வணக்கங்களிலும், ஈடுபட்டிருப்போருக்காகப் பிரார்த்திக்கின்றார்கள்."

"இவ் இரவில் ஜிப்ரீல் (அலை) மின் கட்டளைப்படி மலக்குகள் முஃமீன்கள் வாழுமிடமெல்லாம் சென்று, "முஸாபஹா" செய்கின்றார்கள்.

ஆனால் பன்றி, நாய், தீய நடத்தையால் முழுக்காளியாயிருப்போர் உருவப் படங்கள் இவைகள் உள்ள வீட்டில் மலக்குகள் பிரவேசிக்க மாட்டார்கள்" என இப்னு அப்பாஸ் (ரலி) அறிவித்துள்ளார்கள்.

"லைலத்துல் கத்ர்" இரவில் எந்த ஆஸ்லிமானாலும் நின்றவராகவோ, இருந்தவராகவோ தொழுகையில் அல்லது திக்ரில் ஈடுபட்டிருந்தால் மலக்குகள் அவர்களுக்காகத் "துஆ" செய்வார்கள்.

ஸலாம் கூறி "முஸாபஹா" செய்வார்கள்; அவர்களின் துஆக்களுக்கு "ஆமீன்" கூறுவார்கள்.

சுப்ஹு வரை அவர்கள் இவ்வாறே செயல்படுவார்கள். நல்லமல்களில் ஈடுபடுவோர் அனைவருக்கும் இப்பயன்கள் நிச்சயமாக கிடைக்கவே செய்யும்.

"லைலத்துல் கத்"ரை ரமழானின் பிந்திய பத்து இரவுகளில் ஒற்றைகளில் தேடுவீர்களாக"

இவ்வாறு நபி முஹம்மது (ஸல்) அவர்கள் திருவுளமான தாக அன்னை ஆயிஷா (ரலி) அறிவிக்கின்றார்கள்.

"அல்லாஹ்வின் தூதரே! லைலத்துல் கத்ர் இரவில் எந்த "துஆ" ஓதிக் கேட்பது? என்று அன்னை ஆயிஷா (ரலி) வினவிய போது —

"அல்லாஹும்ம இன்னக்க இன்னக்க அபுவ்வுன் துஹிப்புல் அப்வ பஃபு அன்னீ (யா அல்லாஹ்! நீ உண்மையாகவே மன்னிப்பவன். மன்னிப்பதை பிரியப் படுபவன். எனவே, என்னையும் மன்னித்து விடுவாயாக!) என்று துஆ செய்வீராக" என நாயகம் (ஸல்) நவின்றார்கள்.

இந்த இரவில் செய்யப்படும் நல்ல அமல்களுக்கு ஆயிரம் மாதங்களை விட (சுமார் 84 வருடங்களை விட) அதிக காலம் நன்மை செய்த கூலி கிடைக்கிறது. என்பதனையும் நாம் மறந்து விடக் கூடாது.

இவ்விரவை வீண் பேச்சுக்கள் பேசியும், வீண் பொழுது போக்குகளில் ஈடுபட்டும், "வீடியோ" டெக்குகளை வைத்து நடுநிசி சினிமாப்படங்களைப் பார்த்தும் வீணே கழிப்பவர்களைப் போன்ற துர்ப்பாக்கியசாலிகள் வேறு யாருமில்லை.

நானிலம் போற்றும்; நன்மறை அருளப்பட்ட, நல்லருள் சுரக்கும் நள்ளிரவிலே, நல்லெண்ணத்துடன் நல்லமல்கள் செய்து, நன்மைகளைப் பெற்று நற் சுவர்க்கத்திலே நல் வாழ்வு வாழ நாயன் அல்லாஹ்வின் நல்லருளினை நாடி வேண்டுவோம்;

நன்மையைப் பெறுவோம்; நற் பயனடைவோம்.

(99)

## பொன்மொழிப் பேழை

புனிதமிக்க ரமழான் மாதத்தில் நோன்பாளிகளுக்காக வேண்டி அல்லாஹுத்தஆலா பதினைந்து விதமான "ரஹ்மத்"துக்களை இறக்கி வைக்கிறான்.

இவ்வாறு நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

அவையாவன:—

ரிஸ்கில் விஸ்திரணத்தைக் கொடுக்கிறான்.

எதையெல்லாம் சாப்பிட்டாரோ அதையெல்லாம், "இபாதத்"தாக எழுதப்படுகிறது.

பொருளிலும், பூமியிலும் பரக்கத் செய்யப்படுகிறது.

நற்கருமங்களுக்கு நற் கூலி இரட்டிப்பாக்கப்படுகிறது.

வானம், பூமி அனைத்திலும் உள்ள மலக்குகள் பிழை பொறுக்கத் தேடுகிறார்கள்.

ஷைத்தான்களுக்கு விலங்கிடப்படுகிறது.

ரஹ்மத்தின் தலைவாசல்கள் திறந்து விடப்படுகின்றன.

சுவர்க்கத்தின் தலைவாசல்கள் திறக்கப்பட்டு விடுகின்றன.

நரகத்தில் தலைவாசல்கள் அடைக்கப்படுகின்றன.

ஒவ்வொரு நாளும் இரவில் 7 லட்சம் பாவிகளுக்கு நரகத்திலிருந்து விடுதலை கொடுக்கப்படுகிறது.

ஏழு நாளில் எத்தனை நரகவாதிகளுக்கு விடுதலை கொடுக்கப்படுகிறதோ, அந்த அளவுக்கு ஒவ்வொரு ஜும்ஆவின் இரவிலும் நரக விடுதலை கொடுக்கப்படுகிறது.

ஒவ்வொரு நாளும் சுவர்க்கம் அலங்கரிக்கப்படுகிறது.

"துஆ"க்கள் ஒப்புக் கொள்ளப்படுகின்றன.

அல்லாஹுத்தஆலாவின் சுப செய்தி கிடைக்கிறது.

அல்லாஹ்வுடைய தரிசனமும் கிடைக்கின்றது.

ரமழானில் பொக்கிஷம்" என்ற நூலிலிருந்து

தொகுத்தவர்:

—எம். எம். அபூபக்கர்.

## புனித ரமழான் சிந்தனைகள்

ஸக்காத் எனும் ஏழை வரியினை வழங்க ஏற்ற சிறந்த மாதம் ரமழான். ரமழானில் செய்யப்படும் ஒவ்வொரு "சுன்னத்"தான அமலுக்கும் பர்ளான அமலுக்குரிய தன்மை கிடைக்கிறது. அதேபோல ஒவ்வொரு பர்ளான கிரியைக்கும் எழுபது மடங்கான நன்மை கிடைக்கிறது.

எனவே ஏனைய மாதங்களை விட ரமழானில் ஸக்காத் வழங்குவதால் பன்மடங்கு அதிகரித்த நன்மையை பெற்றுக் கொள்ள முடியும்.

அல்லாஹுத்தஆலா தன் அருள் மறையில் அருளுகின்றான். "எவர்கள் விசுவாசங்கொண்டு. நற் கருமங்களைச் செய்து, தொழுகையைக் கடைப்பிடித்தும், ஸக்காத்தும் (மார்க்க வரியும்) கொடுத்து வருகின்றார்களோ அவர்களுக்கு, அவர்களுடைய கூலி நிச்சயமாக அவர்கள் இறைவனிடத்தில் உண்டு. அன்றி, அவர்களுக்கு (மறுமையில்) எவ்வித பயமுமில்லை; அவர்கள் துக்கிக்கவும் மாட்டார்கள். (அல் குர்ஆன் 2.277).

மேலும் அல்லாஹ். "(கஷ்டத்திலிருப்பவர்களுக்கு) அழகிய கடனை அல்லாஹ்வுக்காக கடன் கொடுப்பவர் யார்? அதை அவன் அவருக்கு அநேக மடங்கு அதிகரிக்கும்படி செய்வான். அல்லாஹ் (பொருளை சிலருக்கு) சுருக்கியும் பிடிப்பான்; (சிலருக்கு) பெருக்கியும் கொடுப்பான். அன்றி, அவனிடமே நீங்கள் மீண்டும் கொண்டுவரப்படுவீர்கள்" (அல் குர் ஆன்2:245).

ஸக்காத்தும் கொடுக்காதவர்களுக்கும், ஒரு சில ரூபாய்களை மட்டும் "பிச்சை"யாக வழங்கி ... கொண்டு அவர்களது நெற்றிகளிலும், விலாக்களிலும், முதுகுகளிலும் சூடிட்டு, "உங்களுக்காக நீங்கள் சேமித்து வைத்திருந்த இவற்றை சுவைத்துப் பாருங்கள் என்று கூறப்படும் நாளை (நபியே! நீர் அவர்களுக்கு ஞாபகமூட்டுவீராக. (அல்குர்ஆன் 9.34, 35)

சிறப்பைத் தருபவனும், செல்வத்தைத் தருபவனும் அல்லாஹ்வே. ஆகவே அவன் தந்த செல்வத்தை அவனது பாதையில், அவன் கூறும் வழியில். அவனது கட்டளைப்படி செலவிட நாம் தயங்கக் கூடாது.

உடலுக்கும், உள்ளத்துக்கும் நோன்பாக இருக்கிறது ரமழான் நோன்பு. அதுபோல் எமது செல்வத்துக்கான நோன்பாக அமைகிறது. ஸக்காத். எனவே ரமழான் நோன்பை நோற்கும் நாம் அதே மாதத்திலேயே ஸக் ...

## தினபதி இஸ்லாமிய பூங்கா

தயாரிப்பு: எப்.எம். பைரூஸ்

# ரமழானில் இளைஞர்கள்

புண்ணியம் ஈட்டி புனிதமாக்கிடும் புனித ரமழானில் வீற்றிருக்கிறோம். இம்மாதத்தின் ஒவ்வொரு தினமும் நமக்கு வெகுமதிகளையும், சில தினங்கள் படிப்பினைகளையும் உணர்த்தி நிற்கிறது.

இஸ்லாத்தின் பிரதான கடமைகளில் நான்காவது நோன்பு. இக்கடமை விசுவாசிகள் யாவரும் மீதும் கடமையாகும்.

"விசுவாசிகளே! நீங்கள் பரிசுத்தவான்களாகும் பொருட்டு, உங்களுக்கு முன்னுள்ளவர்கள் மீது நோன்பு கடமையாக்கப்பட்டது போல் உங்கள் மீதும் கடமையாக்கப்பட்டுள்ளது."

(குர்ஆன் 2:183)

இவ்வாறு இறை மறை கூற – இன்றைய இளைஞர்களில் அநேகர் இக்கூற்றை மிகைத்து வாழ்கின்றனர்.

அதாவது, இக்கடமை வயோதிப ஆண், பெண்களுக்குத்தான் கடமை என்ற போக்கில் வாழ்வதைக் காண முடிகிறது.

**– எம். எம். எம். நூறுல் ஹக் –**

இத்தகைய போக்கிலிருந்து விடுதலை பெற்று நோன்பு நோற்பதன் மூலம் பெறுகின்ற பெறுபேறுகளையும், பேருவகைகளையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

மனோ இச்சையின் போக்கில் வாழத் துணியும் இளமைப் பருவத்தில் இறைவனுக்கு இணக்கமான கைங்கரியங்களில் செயல்பட முன் வர வேண்டும்.

அப்போதுதான் அல்லாஹ் ஆசிக்கின்ற அடியானாக மாற முடியும். மாறாக இளமைப் பருவத்தை வீணாகக் கழித்து விட்டு வயோதிபக் காலத்தில் வணக்கம் புரிந்து வாழ்வோம் என்று வாழ்வது எவ்வளவு மடத்தனமான போக்கு, என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

இன்று இருக்கும் நாம் நாளை இருப்போமா? என்பது கேள்விக் குறி. இத்தகைய நிச்சயமற்ற வாழ்வுக்குரிய நாம் எப்படி இவ்வாறு ஆதரவு வைத்து வாழத் துணிவது?

இளமைப் பருவத்தில் செய்கின்ற நல் அமல்களே அல்லாஹ்விடம் ஏற்றமுள்ளதாகும். (வயோதிபர்களின் அமல்களும் ஏற்றமுள்ளதுதான். ஆயினும் கூலி பெறுவதில் கூடியது இளமைப் பருவத்தில் செய்கின்றவைக்குத்தான்).

ஏனெனில், இளமைப் பருவமென்பது பொல்லாததும், ஷைத்தானின் வழிகேட்டில் சிக்கிக் கொள்வதற்கும் இலகுவானதாகும்.

இதிலிருந்து பாதுகாத்து இறைவனுக்குப் பொருத்தமான பாதையில் வழி நடப்பது வயோதிபத்தை விடச் சிறந்ததாகும். எனவே, எமது இளைஞர்கள் இதனைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

இன்னும் சிலர் நோன்பு நோற்றால் தொழ வேண்டும். இல்லையேல் நோன்பு நோற்க வேண்டியதில்லை என்று கூறிக் கொள்வதை செவிமடுக்கக் கூடியதாகவுள்ளது.

ஒரு கடமை நிறைவேற்றுவதற்கு இன்னுமொரு கடமையைக் காரணம் காட்டி விட முடியாது. ஏனெனில், தொழுகையை நிறைவேற்றும் ஏழையொருவன் – நான் தொழுதால் ஹஜ்ஜு செய்ய வேண்டுமே? என்று எண்ணி விடுவானாகில்; அவனுக்கு இந்நிலை எங்ஙனம் சாத்தியமாகும். அதனால் அவன் தொழாமல் வாழ வேண்டிய நிலை ஏற்படும்.

ஆனால், இஸ்லாம் இதை விரும்பவில்லை. மாறாக ஒவ்வொரு கடமைகளையும், தனித் தனியே பிரித்து அதற்கேற்ப அதன் சட்டங்களை வகுத்துள்ளது.

உதாரணமாக முழுக்குடன் இருக்கும் ஒருவன் தொழ முடியாது. ஆனால் நோன்பு நோற்கலாம்.

அதாவது, ஸஹருக்கு முன்பு முழுக்காளியாகி விட்ட ஒருவன், எதிர்பாராமல் தூங்கி விட்டான். அவன் விழிக்கும் போது ஸஹர் பிந்துமாகின் அவன் ஸஹர் செய்யலாம். பின்னர் குளித்து சுபஹுத் தொழுகையை நிறைவேற்ற வேண்டும்.

எனவே, இஸ்லாத்தின் கடமைகள் இலகுவானதாகும். இதனை நாமுணர்ந்து கொள்ளாது பெரிதாக எண்ணிக் கொண்டுள்ளோம். இளைஞர்கள் தங்களின் சிந்தனையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமானதும், அவசரமானதுமாகும்.

அருட்களை அளவின்றி அள்ளி அருளும் மாண்புமிகு ரமழானின் மகத்துவங்களை நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இளைஞர்களாகிய நாம் – மகத்துவமிக்க ரமழானின் பயன்களைப் பெறுவோமாக.

## நபி மொழிகள்

* பாவங்களில் மிகப் பெரியது அல்லாஹ்வுக்கு இணை வைத்தலும், பெற்றோரின் மனம் நோவித்தலுமாகும்.

* தண்ணீர் குடிக்கும் போது பாத்திரத்தில் மூச்சு விடுவதையும், அதில் (வாயால்) ஊதுவதையும் நபி (ஸல்) அவர்கள் விலக்கினார்கள்.

* கர்வம், மோசடி, கடன் ஆகிய மூன்றினையும் விட்டு நீங்கியவராக எவர் மரிக்கின்றாரோ, அவர் சொர்க்கம் பிரவேசிக்கின்றார்.

* தீய நண்பனை விட தனித்திருப்பது நன்று, தனித்திருப்பதை விட நல்ல நண்பன் நன்று.

* மது அருந்துபவர்கள், பெற்றோர்களுக்குத் தீங்கிழைத்தவர்கள், விபசாரத்துக்குப் பெண்களைக் கூட்டிக் கொடுப்பவர்கள் சொர்க்கம் பிரவேசிக்க மாட்டார்கள்.

* மனிதர்களுக்கு நன்றி தெரிவிக்காதவன் அல்லாஹ்வுக்கும் நன்றி தெரிவிப்பதில்லை.

* உலகப் பொருட்கள் அனைத்தும் அற்ப சுகம் கொண்டவை. அவற்றுள் சிறந்தது நல்ல பெண்மணியே!

* வட்டிப் பொருள் எவ்வளவுதான் வந்து குவிந்தாலும் அதன் முடிவு இல்லாமையே!

* கோள் மூட்டி வைப்பவன் சொர்க்கத்தின் வாட

* ஆண்கள் பூசும் வாசனை, நிறம் காட்டாத, வாடையைக்கூட நுகர மாட்டான்.

வெளிப்படையானதாகவும், பெண்கள் பூசும் வாசனை வாடை வெளிக்காட்டாத நிறமுள்ளதாகவும் இருக்கட்டும்.

* உண்மை விசுவாசமுள்ள ஒருவரை மனம் நோவிப்பவன் அல்லது அவரை வஞ்சிப்பவன் சாபத்துக்குள்ளாகின்றான்.

* மணம் புரிந்து மக்களைப் பெருக்குங்கள்! இஸ்லாத்தில் துறவறம் இல்லை.

* உங்களுக்கும் பொறாமைக்கும் நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனெனில், நெருப்பு விறகை தின்று விடுவதைப் போல் நிச்சயமாக பொறாமை நன்மைகளைத் தின்று விடும்.

* உமக்கும் அதிகம் சிரிப்பதற்கும் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனெனில் அது இதயத்தை உணர்வில்லாமலாக்கும். முக வொளியைப் போக்கி விடும்.

* ஒருவர் தம் பொருளை மனமிசைந்து உமக்கு அவர் கொடுக்காதவரை அதை நீர் பெறுதல் கூடாது.

தொகுப்பு:—

— ஏ. ஜே. துவான் சஹீத்.

பிடித்தும், ஸக்காத்தும் (மார்க்க வரியும்) கொடுத்து வருகின்றார்களோ அவர்களுக்கு,

## மௌலூது தமாம் வைபவம்

கண்டி மீரா மக்கம் பள்ளிவாசலில் நாளை 23 ஆம் திகதி இரவு 9.30 மணிக்கு, பத்று சஹாபாக்கள மௌலூது தமாம் வைபவம் இடம் பெறும்.

அன்றைய தினம் பள்ளிவாசலின் பேஷ் இமாம் மௌலவி ஏ. எச். எம். மர்சூக் ஓதும் கிருஅத்துடன் மௌலூது தமாம் நிகழ்ச்சிகள் நடைபெறும்.

இவ்வைபவத்தில் கொழும்பு அல்–மத்ரஸதுல் பீர் சஹிபியா அதிபர் மௌலவி அல்ஹாஜ் எஸ். நியாஸ் முகம்மது, சிறப்புச் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

வைபவத்தின் இறுதியில் துஆ பிரார்த்தனையும், நேர்ச்சை வழங்கலும் இடம் பெறும்.

இந்த வைபவத்தை மத்திய மாகாண பத்று கமிட்டியினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

(எ—105)

ஸக்காத்தும் கொடுக்காதவர்களுக்கும், ஒரு சில ரூபாய்களை மட்டும் "பிச்சை"யாக வழங்கி விட்டு ஸக்காத் கொடுத்து விட்டதாக சமாளிப்பவர்களுக்கும் நிச்சயமாக கடுமையான வேதனைகள் உண்டு.

"மேலும் (எவர்கள்) பொன்னையும். வெள்ளியையும் சேகரித்து வைத்துக் கொண்டு அதனை அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாதிருக்கின்றனரோ அவர்களுக்கு துன்புறுத்தும் வேதனை உண்டென (நபியே!) நீர் கூறுவீராக. (பொன் வெள்ளியாகிய) அவற்றை நரக நெருப்பில் பழுக்கக் காய்ச்சி அவற்றைக் ... பாக அமைகிறது. ஸக்காத். எனவே ரமழான் நோன்பை நோற்கும் நாம் அதே மாதத்திலேயே ஸக்காதையும் கொடுக்க முன் வர வேண்டும்.

ஸக்காத் கொடுப்பதால் எமது கடமை தீரும்; செல்வம் அதிகரிக்கும்; வாழ்வில் பரக்கத்தும், அபிவிருத்தியும் ஏற்படும். மாறாக அதனை அசட்டையாக விட்டு விட்டோமானால் இறைவனின் பயங்கர தண்டனைகளுக்கு ஆளாக நேரிடும்.

எனவே, இப் புனித ரமழானிலே ஸக்காத்தினை வழங்கி நரகிலே தற்காப்பு பெற்று சிறப்படைவோமாக! (11)

— ரஷீட் நூருல் அயின்.

## இப்படி வாழ்ந்தவர்... இப்படி எழுவார்!

* இம்மையில் அண்டை வீட்டாரைத் துன்புறுத்தியவர்கள் மறுமையில் கை, கால்கள் இல்லாதவர்களாக எழுப்பப்படுவர்.

* இம்மையில் தொழுகையை நிறை வேற்றத் தவறியவர்கள் மறுமையில் பன்றியின் உருவத்தில் எழுப்பப்படுவர்.

* இம்மையில் "ஸகாத்" கடமையை நிறைவேற்றத் தவறியவர்கள் மறுமையில் வயிறு பெருத்தவர்களாக எழுப்பப்படுவர்.

* இம்மையில் புறம் பேசித் திரிபவர்கள் மறுமையில், வாய்களில் இரத்தம் வடிந்தவர்களாக எழுப்பப்படுவர்.

* இம்மையில் அல்லாஹ்வின் பயமின்றி மனிதர்களுக்குப் பயந்து மறைமுகமாக பாவச் செயல்களில் ஈடுபட்டவர்கள் மறுமையில் துர் நாற்றம் உடையவர்களாக எழுப்பப்படுவர்.

* இம்மையில் பொய்ச் சத்தியம் செய்தவர்கள், மறுமையில் கழுத்து அறுபட்டவர்களாக எழுப்பப்படுவர்.

* இம்மையில் தெரிந்த விஷயங்களுக்குச் சாட்சி கூற மறுத்தவர்கள் வாய்களிலிருந்து சீழ் வடிந்தவர்களாக மறுமையில் எழுப்பப்படுவர்.

* இம்மையில் விபச்சாரத்தில் ஈடுபட்டு பாவ மன்னிப்புத் தேடாமல் மரணமடைந்தவர்கள் மறுமையில் தலை கீழாக எழுப்பப்படுவர்.

* இம்மையில் அநாதைகளின் சொத்துக்களை அநீதமான முறையில் பயன் படுத்தியவர்கள் முகம் கறுத்தவர்களாகவும், நெருப்பினால் வயிறு நிரம்பியவர்களாகவும் மறுமையில் எழுப்பப்படுவர்.

* இம்மையில் பெற்றோர்களைத் துன்புறுத்தியவர்கள் மறுமையில் குஷ்டம் பிடித்தவர்களாக எழுப்பப்படுவர்.

* இம்மையில், மதுபானம் அருந்தியவர்கள் நெஞ்சுவரை உதடு தொங்கிய நிலையிலும், குருடர்களாகவும், மாட்டின் கொம்பு போன்ற பற்கள் உடையவர் களாகவும் மறுமையில் எழுப்பப்படுவர்.

(ஆதாரம்: பாபுல் ஜன்னத்,)

— தொகுப்பு

—மஜீத்

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1404 ரமழான் பிறை 21

## மாண்புறு இரவில் நம்பணி!

புனித "லைலத்துல் கத்ர்" இரவு ஆயிரம் மாதங்களை விட மேலான வரிசைகள் நிறைந்தது.

இந்த இரவிலே செய்யும் நன்மைகளுக்கு அல்லாஹ் அதிகமான கூலி கொடுக்கிறான்.

"நிச்சயமாக இந்த வேதத்தை லைலத்துல் கத்ர் என்னும் பாக்கியம் உள்ள இரவில் முதல் முதலாக இறக்கி வைத்தோம்.

"இந்த இரவு ஆயிரம் மாதங்களை விட மிகச் சிறந்ததாக இருக்கும்."

இவ்வாறு அல்லாஹுத்தஆலா கூறுகிறான்.

"இந்த இரவு என் "உம்மத்து" மார்களுக்கு மாத்திரமே அல்லாஹ்வால் அருளப்பட்டுள்ளது. வேறெந்த "உம்மத்து" மார்களுக்கும் அருளவில்லை."

இவ்வாறு நபி முஹம்மது (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அருள் மறை இறங்கிய இந்த அற்புத இரவின் மகிமையை வார்த்தைகளில் வர்ணிக்க முடியாது.

இந்த "லைலத்துல் கத்ர்" இரவை அடையும் நாம் வீண் விளையாட்டுக்களில் ஈடுபடாது நல்ல அமல்களைச் செய்து இந்த இரவைக் கண்ணியப் படுத்த வேண்டும்.

மஸ்ஜிதுகளில் தங்கி பாவமன்னிப்பு தேட வேண்டும்.

இந்த இரவிலே உண்மையான நல்ல அடியார்கள் சமூகம் மலக்குகள் விஜயம் செய்து "முஸாபஹா" செய்கின்றனர்.

உண்மை விசுவாசிகளை அணுகி ஆசிர்வாதம் செய்கின்றனர். அன்றைய தினத்திலே அவர்களுக்காக அல்லாஹ்விடம் பிரார்த்தனை புரிகின்றனர். அவர்களின் வணக்கங்களுக்குப் பெருமதிப்பு உண்டு.

இந்த இரவு இவ்வாறெல்லாம் மகத்துவம் பெற்று இருப்பதால் இந்த இரவை நாம் கண்ணியமான முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதுவே நமது பணியாக இருக்கவும் வேண்டும்.

## வானொலி

22 — 6 — 1984

காலை

5.30 நாதாஞ்சலி
5.35 திருமுறைப்பாடல்கள்
6.00 சைவநற்சிந்தனை
6.05 இஸ்லாமிய நற்சிந்தனை
6.10 பாமாலை
6.30 செய்திகள்
6.50 மெல்லிசைப்பாடல்கள்
7.00 தலையே நீ வணங்காய்
7.30 மாகாணச்செய்திகள்
7.35 நாதஸ்வரம் ஷேக் சின்னமௌலானா
8.15 முஸ்லிம் நிகழ்ச்சி

மாலை

6.00 செய்திகள்
6.20 [illegible] நிகழ்ச்சி
6.35 ஞானமிர்தம்
7.05 முஸ்லிம் நிகழ்ச்சிகள்
8.00 உலகச்செய்திகள்
8.10 களத்துமேடு
8.25 இல்லறஜோதி
8.40 நாட்டுப்பாடல்
8.45 பேச்சு இலக்கண வரம்பு செ. வேலாயுதபிள்ளை

9.00 செய்திகள்
9.30 மெல்லிசைப்பாடல்
9.45 கதாப்பிரசங்கம் "பாதுகா பட்டாபி ஷேகம்" திருமுருக கிருபானந்தவாரியார்.

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

5.30 நோ யுவர் கண்ட்ரீ
5.35 "காயனு"
6.00 விளையாட்டுப் பயிற்சி
6.30 பிரதிபா
6.55 செய்திகள் தமிழ்
7.15 தீப சாரிகா
7.45 இசை நிகழ்ச்சி
8.15 செய்திகள் சிங்களம்
8.35 "கும் உதாவ" 84
9.05 கிரிக்கெட் ஆஸ்திரேலியா — பாகிஸ்தான் (5வது டெஸ்ட்)

9.30 செய்திகள் ஆங்கிலம்
9.50 கிரிக்கெட் தொடர்ச்சி
10.30 உலகச்செய்திகள்
10.35 கிரிக்கெட் தொடர்ச்சி

### ஐ. டி. என்.

6.31 3-2-1 தொடர்பு கொள்ளுங்கள்

---

சகல மாவட்டத்திலும்

# இன ஒற்றுமை விளையாட்டு விழா

## பதுளை மாவட்ட அமைச்சர் கருத்து

அப்புத்தளை, ஜூன் 21

இன ஒற்றுமை விளையாட்டு விழா சகல மாவட்டங்களிலும் நடத்தப்பட வேண்டும்.

இவ்வாறு பதுளை மாவட்ட அமைச்சரும், பண்டாரவளை எம். பியுமான திரு. ஆர். எம். அப்புஹாமி கூறினார்.

பண்டாரவளைத் தொகுதியைச் சேர்ந்த "பள்ளே கெட்டுவ கிராமோதய சபையின் ஏற்பாட்டின் கீழ் பள்ளேகெட்டுவ கிராமசபை மைதானத்தில் நடைபெற்ற, "இன ஒற்றுமை விளையாட்டு விழா" வில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. அப்புஹாமி தொடர்ந்தும் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது:—

இன்று எமது நாட்டின் வளர்ச்சிக்கும், அமைதியான வாழ்க்கைக்கும் மிக முக்கியமாக தேவைப்படுவது இன ஒற்றுமையே.

மக்களிடையே ஐக்கியத்தையும், இன ஒற்றுமையையும் வளர்க்க விளையாட்டு ஏதுவாக உள்ளது.

விளையாடுவதற்கென மைதானத்தில் இறங்கும் போது ஒவ்வொரு வீரர்களினதும் நோக்கம் "வெற்றி"யை எதிர் நோக்கியே இருக்கிறது. அங்கு ஜாதி மத பேதங்களுக்கே, ஏற்றத் தாழ்வு உணர்ச்சிகளுக்கே இடமில்லை. சகோதர எண்ணமே அங்கு எழுந்து நிற்கின்றது.

உண்மையான விளையாட்டின் தாற்பரியம் இதுவே. இத்தகைய ஒரு உன்னத தன்மையை ஏற்படுத்தும் விளையாட்டு ஐக்கியத்திற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ளது.

பிரிந்து நிற்கும் எமது நாட்டு சமூகத்தினரை விளையாட்டு மூலம் ஒன்றுபடுத்தலாம்.

எனவே விளையாட்டுத் துறையை வளர்ப்பதில் கிராமிய நகர்புற மக்கள் யாவரும் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

அரசாங்கம் விளையாட்டு வளர்ச்சிக்கென ஆண்டு தோறும் ஒதுக்கும் நிதியை உரிய முறையில் பயன் படுத்தி விளையாட்டுத்துறையை வளர்க்க அனைவரும் பாடுபடுவோமாக!

— இப்படி அவர் கூறினார். (ந—100)

---

## பண்டத்தரிப்பில் வீட்டுத் தோட்ட போட்டி

சித்தன்கேணி, ஜூன் 21

பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு மகளிர் குழு வீட்டுத் தோட்டச் செய்கைப் போட்டி ஒன்றை மகளிர் குழுவின் 27 கிளைகளுக்கு மிடையே நடத்தவுள்ளது.

தொல்புரம் கமநல சேவை நிலைய கமத்தொழில் போதனாசிரியர், கீரிமலைகமநல சேவை நிலைய கமத்தொழில் போதனாசிரியர், ஆகியோரினதும் யாழ். திருநெல்வேலி விவசாயப் பயிற்சி பாடசாலை அதிபரினதும் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்த வீட்டுத் தோட்டச் செய்கைப் போட்டிக்கான சகல நடவடிக்கைகளையும் பண்டத்தரிப்பு கூட்டுறவு மகளிர் குழுத் தலைவி திருமதி பேளி அத்தனாசியார், பண்டத்தரிப்பு பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கல்வி உத்தியோகத்தர் திரு. சி. நடராசா ஆகியோர் மேற்கொண்டு வருகின்றனர். (ந—283)

---


## இன்றைய திரைகளில்

### 5—வதுவாரம்

சமந்தா
10.00, 2.00, 6.00, 9.30

வின்ஸர்
(யாழ். நகர்)
10.30, 2.30, 6.00, 9.30

சரஸ்வதி
(திருமலை)
6-00 9-30

மக்கள் திலகம் எம். ஜி. ஆர். ஜெயலலிதா நடித்த

ஒளி விளக்கு

(கலர்)
(புத்தம் புதிய கொப்பி)


---

## விளையாட்டுப் பகுதி

# 8 ஆவது ஆசிய உதைபந்தாட்டம்

## இலங்கை பங்குபற்றுகிறது

கொழும்பு, ஜூன் 22

இவ்வருடம் அக்டோபர் மாதம் ஜெத்தாவில் நடைபெறவுள்ள 8ஆவது ஆசிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இலங்கை அணி கலந்து கொள்ளும்.

இலங்கை உதைபந்தாட்ட அணியின் விளையாட்டுத் திறன் குறைந்து வருவதாக அதிகாரிகள் கூறி வந்துள்ளனர்.

இரு வெளிநாட்டுச் சுற்றுப் போட்டிகளில் அடுத்தடுத்து கலந்து கொள்வது உதைபந்தாட்ட சபைக்கு பொருளாதார

## சாய்ந்தமருதில் கரபந்தாட்டம்

சாய்ந்தமருது, ஜூன் 21

சாய்ந்தமருது டொல்பின் விளையாட்டுக் கழகம் தனது மூன்றாவது ஆண்டு நிறைவை முன்னிட்டும், ரம்ழான் நோன்புப் பெருநாளை ஒட்டியும் கிழக்கிலங்கையில் மின் ஒளியில் அணிக்கு 4 பேரைக் கொண்ட கரபந்தாட்ட சுற்றுப் போட்டியை நடத்தவுள்ளது.

இப் போட்டியில் பங்கு பற்றும் கழகங்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் செயலாளர், டொல்பின் விளையாட்டுக் கழகம், 434A, பிரதான வீதி,

# மத்தியஸ்தர் கொடுப்பனவுகள் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 22

எதிர்காலத்தில் உதைபந்தாட்ட போட்டிகளில் மத்தியஸ்தம் வகிக்கும் மத்தியஸ்தர்களுக்கு வழங்கும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன.

இலங்கை உதைபந்தாட்ட கட்டுப்பாட்டுச் சபையின், மத்தியஸ்தர்கள் கமிட்டி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

சபையில் தம்மைப் பதிவு செய்து கொண்டுள்ள சகல மத்தியஸ்தர்களுக்கும் புதிய கொடுப்பனவுகள் வழங்கப்படுமென கமிட்டி அறிவித்துள்ளது.

கட்டுப்பாட்டுச் சபையில்

உடனடியாக நடவடிக்கைகள் எடுக்குமாறு கேட்கப்பட்டுள்ளன.

புதிய கொடுப்பனவு முறைகள் வருமாறு:—

சிரேஷ்டதர மத்தியஸ்தர்களுக்கு ஒரு போட்டிக்காக ரூ. 100.

முதல்தர, இரண்டாம் தர மத்தியஸ்தர்களுக்கு ரூ. 80.

மூன்றாந்தர மத்தியஸ்தர்களுக்கு ரூ. 60. (ந)

## கண்ணகை அம்மன் பொங்கல் விழா

முல்லைத்தீவு, ஜூன் 21

வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் விழா அண்மையில் நடைபெற்றது.

இம்முறை விழாவில் ஆடம்பரக் கடைகளுக்குத் தடை விதிக்கப்பட்டிருந்தது. வெளி இடங்களில் இருந்து பக்தர்கள் மிகவும் குறைவாகவே வருகை தந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ல—198)

"சென். நிக்கலஸ்"

**ஐ. டி. என்.**

6.31 3-2-1 தொடர்பு கொள்ளுங்கள்
7.00 "கீத தாரு"
7.30 நன்வி வென் ஐ லாப்
8.00 பிளக் அன்ட் வைட் சோ
9.00 பயனிக் வுமன்
9.30 செய்திகள் ஆங்கிலம்
9.45 பயனிக் வுமன் தொடர்ச்சி

நடைபெறவுள்ள [illegible] ஆசிய உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இலங்கை அணி கலந்து கொள்ளும்.

இச் சுற்றுப் போட்டியை ஆசிய உதைபந்தாட்ட சம்மேளனம் ஏற்பாடு செய்துள்ளது.

இப் போட்டியில் பங்கு பற்றுவதன் மூலம் இலங்கையின் உதைபந்தாட்ட திறனை அறிந்து கொள்ளக் கூடியதாக இருக்கும்.

கள் கூறி வந்துள்ளனர்.

இரு வெளிநாட்டுச் சுற்றுப் போட்டிகளில் அடுத்தடுத்து கலந்து கொள்வது உதைபந்தாட்ட சபைக்கு பொருளாதார ரீதியில் முடியாததொன்று. ஆனல் ஆசியச் சுற்றுப் போட்டியில் பங்குபற்றுவது எமது திறன்களை வளர்த்துக்கொள்ள அதிக வாய்ப்பைத் தரும். நமக்கு வேண்டிய அனுபவம் இதனல் கிடைக்கும்.

'இவ்வாறு இலங்கை உதைபந்தாட்ட கட்டுப்பாட்டுச் சபைத் தலைவர் எப். ஏ. யாசின் கூறினர். (ந)

இப் போட்டியில் பங்கு பற்றும் கழகங்கள் இம்மாதம் 25 ஆம் திகதிக்கு முன் செயலாளர், டொல்பின் விளையாட்டுக் கழகம், 434A, பிரதான வீதி, சாய்ந்தமருது — 5 என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளும்படி கோரப்படுகிறார்கள். (ந)

[illegible] கொடுப்பனவுகள் வழங்கப்படு மென கமிட்டி அறிவித்துள்ளது.

கட்டுப்பாட்டுச் சபையில் அங்கத்துவம் பெற்றுள்ள சகல ஒன்றிணையங்களும் இப்புதிய கொடுப்பனவுகளை வழங்க

# தேசிய விளையாட்டு விழாவில் ஆறு விளையாட்டுகள்

கொழும்பு, ஜூன் 22

நாடாளுமன்ற அலுவல்கள், விளையாட்டு அமைச்சினல் ஏற்பாடு செய்யப்படும் 11 ஆவது தேசிய விளையாட்டு விழாவில் 6 விளையாட்டுக்கள் இடம் பெறுகின்றன.

வலைபந்தாட்டம், உதைபந்தாட்டம், எல்லே, கரபந்தாட்டம், மரதன் ஓட்டம், சைக்கிளோட்டம் ஆகியவையே இந்த ஆறு விளையாட்டுகளாகும்.

வலைபந்தாட்டப் போட்டியின் முதற் சுற்று ஆட்டங்கள் தற்போது விளையாட்டு அமைச்சின் அரங்கில் நடைபெற்று வருகின்றன.

மாவட்ட ரீதியில் நடைபெறும் இச் சுற்றுப் போட்டியில் 24 மாவட்ட அணிகள் பங்கு பற்றுகின்றன. இந்த அணிகளுக்கு போக்குவரத்து, தங்குமிடம். உணவு ஆகிய வசதிகளை விளையாட்டமைச்சு மேற் கொண்டுள்ளது.

ஏற்கனவே நடைபெற்றுள்ள முதற் சுற்று ஆட்டங்களின் முடிவுகள் வருமாறு:—

யாழ்ப்பாண மாவட்ட அணி 42–17 புள்ளிகளால் நுவரெலியா மாவட்ட அணியைத் தோற்கடித்தது.

அம்பாறை அணி 34–13 புள்ளிகளால் மன்னர் அணியையும்,

காலி அணி 24–20 புள்ளிகளால் மட்டக்களப்பு அணியையும்,

புத்தளம் அணி 39–10 புள்ளிகளால் மொனராகலை அணியையும்,

யாழ்ப்பாண அணி 45–36 புள்ளிகளால் மாத்தளை அணியையும்,

கேகாலை அணி 45–23 புள்ளிகளால் அம்பாறை அணியையும்,

களுத்துறை அணி 30–29 புள்ளிகளால் காலி அணியையும்,

கொழும்பு அணி 52–08 புள்ளிகளால் புத்தளம் அணியையும் தோற்கடித்துள்ளன. (ந)

# பாடசாலை றகர்

கொழும்பு, ஜூன் 22

ஆனந்தாக் கல்லூரி அணிக்கும் டி. எஸ். சேனநாயக்காக் கல்லூரி அணிக்குமிடையே ஹவலக் மைதானத்தில் நடைபெற்ற றகர் போட்டியில் ஆனந்தா அணி 28–6 புள்ளிகளால் வெற்றி பெற்றது.

இடைவேளையின் போது 10–3 புள்ளிகளால் ஆனந்தா முன்னணியில் நின்றது.

லலித் ஹேவகே, சந்திரசிரி, குணபால, கபில பெரேரா, குசும் [illegible], ஜனக [illegible] ஆகியோர் ஆனந்தாக் கல்லூரி அணிக்கான புள்ளிகளையும்,

பானு தர்மவர்தன, டி. எஸ். சேனநாயக்கா அணிக்கான புள்ளிகளையும் பெற்றுக் கொடுத்தனர்.

சி. எச். செனவிரட்ண இப் போட்டிக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

இரு கல்லூரிகளினதும் இரண்டாவது அணிகளுக்கிடையிலான போட்டி வெற்றி தோல்வியற்ற நிலையில் முடிவுற்றது (ந)

## விக்டரி வெற்றி

பேசாலை, ஜூன், 21

அமரர் ஈ. சாகுல் ஹமீத் ஞாபகார்த்த வெற்றிக் கேடயத்திற்காக எருக்கலம்பிட்டி யாஹூ ஒற்றுமை இயக்கத்தினல் நடத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டியில் விக்டரி விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

அணிக்கு 7 பேர் கொண்ட இவ்வுதை பந்தாட்டப் போட்டியில் மொத்தம் 12 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன.

எருக்கலம்பிட்டி யாஹூ ஒற்றுமை இயக்கத் தலைவர் ஜனப் ஏ. எஸ். நௌசாத் தலைமையில் நடைபெற்ற இவ்வுதை பந்தாட்டப் போட்டியின் போது மன்னர் உதவி பொலீஸ் அத்தியட்சகர் திரு. இராஜேஸ்வரன் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றியீட்டிய கழகத்திற்கு வெற்றிக் கேடயத்தை வழங்கினர். (ந–251)

## வெற்றிப் பெருமிதத்தில் கம்பஹா அணித் தலைவர்



ஜே. ஆர் ஜெயவர்த்தன வெற்றிக் கிண்ணத்தைக் கையில் ஏந்திய வண்ணம் வெற்றிப் பெருமிதத்துடன் கம்பஹா அணியின் தலைவர் அர்ஜுன ரணதுங்க படத்தில் காணப்படுகிறார்.

# கம்பஹா அணிக்கு ஜெயவர்த்தன கிண்ணம்

கொழும்பு, ஜூன் 22

அகில இலங்கை மாவட்ட அணிகளுக்கிடையே ஜே. ஆர். ஜெயவர்த்தன கிண்ணத்திற்காக நடைபெற்ற கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் கம்பஹா மாவட்ட அணி வெற்றி பெற்றது.

இலங்கை தேசிய கிரிக்கெட் அணியின் அங்கத்தவரான அர்ஜுன ரணதுங்கவின் தலைமையிலான கம்பஹா அணி இறுதிப்போட்டியில் மாத்தறை அம்பாந்தோட்டை அணியைத் தோற்கடித்தது.

எஸ். எஸ். சி. மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கம்பஹா அணி முதல் இன்னிங்ஸில் வெற்றி பெற்று ஜே. ஆர். ஜெயவர்த்தன கிண்ணத்தை வெற்றி பெற்ற முதல் அணி என்ற பெருமையைப் பெற்றது.

முதல் துடுப்பெடுத்தாடிய மாத்தறை அம்பாந்தொட்டை அணி முதல் இன்னிங்ஸில் 95 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது.

கிரஹாம் லைபருய் (32 ஓட்டங்களுக்கு 2 விக்கட்), வியான் பீரிஸ் (30 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்) ஆகியோர் மாத்தறை அணியை குறைந்த ஓட்டங்களுக்கு வெளியேற்ற உதவினர்.

பதிலுக்கு ஆடிய கம்பஹா அணி முதல் இன்னிங்ஸில் 182 ஓட்டங்களைப் பெற்றது.

ரணில் அபேநாயக்க ஆட்டம் இழக்காது 105 ஓட்டங்களைப் பெற்று கம்பஹா அணியின் வெற்றியை உறுதி செய்தனர்.

மாத்தறை அணி இரண்டாம் இன்னிங்ஸில் ஆட்டமுடிவின் போது 1 விக்கட் நட்டத்துக்கு 60 ஓட்டங்களைப் பெற்றது. (ந).

# "சென். நிக்கலஸ்", உதைபந்தாட்ட சாம்பியன்

சித்தன்கேணி, ஜூன் 21

அராலி சில்வர் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழகம் நடாத்திய "அமரர் இ. கணேசலிங்கம்" ஞாபகார்த்த சுழற்கேடயத்திற்கான அணிக்கு 7 பேர் கொண்ட உதைப்பந்தாட்டப் போட்டியில் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் வெற்றியீட்டியது.

இப் போட்டியில் 23 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்டன.

இறுதிப் போட்டியில் பொம்மைவெளி முஸ்லிம் பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகமும், நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் 4–1 கோல்களைப் பெற்று "அமரர் இ. கணேசலிங்கம்" ஞாபகார்த்தச் சுழற் கேடயத்தைச் சுவீகரித்துக் கொண்டது.

அராலி சில்வர் ஸ்டார்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டிக்கு பிரதம விருந்தினர்களாக யாழ். மாவட்ட விளையாட்டதிகாரி திரு. [illegible] தாஸ், வலிமேற்குப் பிரிவு விளையாட்டதிகாரி திரு. கே. அரிச்சந்திரா ஆகியோர் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினர்.

இப் போட்டிக்கு திரு. எஸ். கணேஸ் மத்தியஸ்தராக கடமையாற்றினர். (ந–283)

# வட்டார பாடசாலை போட்டிகள்

## அக்குரஸ்ஸ

அக்குரஸ்ஸ கல்வி வட்டாரத்திலுள்ள பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியில் கொடப்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயம் சிரேஷ்ட பிரிவிலும், வில்பிட்ட மகா வித்தியாலயம் கனிஷ்ட பிரிவிலும் சம்பியனகின.

சிரேஷ்ட பிரிவில் கொடப்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயம் 129 புள்ளிகளையும், வில்பிட்ட மகா வித்தியாலயம் 106 புள்ளிகளையும், போப்பாகொட மகா வித்தியாலயம் 86 புள்ளிகளையும் பெற்று முறையே முதலாம், இரண்டாம், மூன்ரும் இடங்களைப் பெற்றன.

கனிஷ்ட பிரிவில் வில்பிட்ட மகா வித்தியாலயம் 103 புள்ளிகளைப் பெற்று வெற்றிக் கேடயத்தை சுவீகரித்துக் கொண்டதுடன், கொடப்பிட்டிய கனிஷ்ட வித்தியாலயம் 69 புள்ளிகளைப் பெற்று இரண்டாம் இடத்தையும், அதுரலிய மகா வித்தியாலயம் 44 புள்ளிகளைப் பெற்று மூன்ரும் இடத்தையும் சுவீகரித்துக் கொண்டன.

இந்த விளையாட்டுப் போட்டி அதுரலிய மகா வித்தியாலய திடலில் நடைபெற்றது. (ந–25)

## பாணந்துறை

பாணந்துறை, ஜூன் 21

அண்மையில் களுத்துறையில் தமிழ் வட்டார பாடசாலைகளுக்கு இடையில் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டிகள், தர்காநகர் ஸாஹிரா கல்லூரி விளையாட்டுத் திடலில் நடைபெற்றன.

மொத்தம் இருபத்திரண்டு பாடசாலைகள், இவ்வில்ல விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொண்டன.

போட்டிக்கு பிரதம அதிதியாக பேருவளைத் தொகுதி முதல்வரும், அமைச்சருமாகிய அல்ஹாஜ் எம். ஏ. பாக்கீர் மாக்கார் கலந்து கொண்டு பரிசில்களையும் சான்றிதழ்களையும் வழங்கினர்.

களுத்துறை கல்விப் பிராந்திய அத்தியட்சகர் திரு. வீ. எஸ். ஆரியவன்ச, களுத்துறை தமிழ் வட்டாரக் கல்வி அதிகாரி ஜனப் எம். இஸட். எம். லாபீர் ஆகியோரும் கௌரவ அதிதிகளாக கலந்து கொண்டனர். (ந)

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறு தோறும் வெளிவரும்

## மருதானை செல்வவிநாயகர் வருஷாபிஷேகம்

கொழும்பு, ஜூன் 22

கொழும்பு; மருதானை ஸ்ரீபால செல்வ விநாயக மூர்த்தி கோவிலின் வருஷாபிஷேகம், எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி ஆரம்பமாகும்.

ஜூலை முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாகும் வருஷாபிஷேக விழா தொடர்ந்து பத்து நாட்கள் நடைபெறும்.

ஜூலை 10 ஆந் திகதி நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகமும், மாலையில் திருவிழாவும் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. (க)

## ஜூலையில் சேதமாக்கப்பட்ட நுவரெலியா கடைகள்

### வெளிநாட்டு உதவியுடன் புனரமைப்பு

கொழும்பு, ஜூன் 22

கடந்த ஜூலை மாத கலவரங்களின் போது நுவரெலியா மாவட்டத்தில் சேதமாக்கப்பட்ட கடைகள், வெளிநாட்டு நிதி உதவியுடன் புனரமைக்கப்படும்.

இதற்கான நடவடிக்கைகளை காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அபிவிருத்தி அமைச்சர் திரு. காமினி திசாநாயக்கா மேற்கொண்டு வருகிறார்.

மேற்படி கடைகளைத் திருத்துவதற்கு வங்கிகளிலிருந்து கடன் பெற்றால் கூடுதலான வட்டியை செலுத்த வேண்டும். அதனாலேயே வெளிநாடுகளில் இருந்து குறைந்த வட்டியில் கடன் பெற திர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இக்கடைகளை புனரமைப்பதன் மூலம் நுவரெலியாவை புதிய நகரமாக மாற்றியமைக்க திட்டமிட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இந்த வெளிநாட்டுக் கடன் தொடர்பாக மத்திய வங்கியின் தலைவர் திரு. டபிள்யூ. இராசபுத்திரத்துடன் அமைச்சர் கலந்துரையாடியுள்ளார். (ப—ர)

# முஸ்லிம் பாடசாலைகளில் குறைபாடுகள்

## நடவடிக்கை எடுக்க வலியுறுத்தி கல்வி அமைச்சருக்கு மகஜர்

நாட்டில் முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை விரைவில் நிவர்த்தி செய்யுமாறு இலங்கை இஸ்லாமிய ஆசிரியர் சங்கம், கல்வி அமைச்சர் திரு. ரணில் விக்கிரமசிங்காவிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறது.

முஸ்லிம் பாடசாலைகளில் நிலவும் குறைபாடுகளை சுட்டிக்காட்டி சங்கம் அமைச்சருக்கு மகஜர் ஒன்றை அனுப்பி வைத்திருக்கிறது.

முஸ்லிம் பாடசாலைகளில் கடமை புரிந்த தமிழ் ஆசிரியர்களில் பெரும்பாலானோர் கடந்த ஜூலை வன்செயல்களின் பின்னர் கடமைக்குத் திரும்பவில்லை.

அண்மையில் தொகுதி வாரியாக பட்டதாரி ஆசிரியர்கள் நியமிக்கப்பட்ட போதிலும் முஸ்லிம் பாடசாலைகளில் போதியளவு ஆசிரியர்கள் நியமிக்கப்படவில்லை.

முஸ்லிம் பாடசாலைகளில் இருந்து வெளிநாடுகளுக்குச் சென்ற ஆசிரியர்களுக்குப் பதிலாக புதிதாக ஆசிரியர்கள் இந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பப்படவில்லை.

ஓய்வு பெற்ற ஆசிரியர்களுக்குப் பதிலாகவும் புதியவர் நியமிக்கப்படவில்லை.

முஸ்லிம் பாடசாலைகளில் பாலர் வகுப்புகளுக்குக் கற்பிக்கக்கூடிய ஆசிரியர்களுக்கும் பற்றாக்குறை நிலவுகின்றது.

பெரும்பாலான முஸ்லிம் பாடசாலைகளில் போதிய தளபாட, கட்டட வசதியில்லை. விஞ்ஞான ஆய்வு கூடம், மனையியல் உபகரணங்கள் போன்றவையும் பெரும்பாலான பாடசாலைகளுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இத்தகைய குறைபாடுகளை நீக்க வேண்டும். மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கும் முஸ்லிம் பாடசாலைகளின் வளர்ச்சிக்கு உதவ வேண்டும்.

— இப்படி அந்த மகஜரில் கேட்கப்பட்டிருக்கிறது. (ப—11)

# ரஷ்யாவில் பல்; இன மக்கள் ஐக்கியமாக வாழ்கின்றனர்

## வண. சுமணசார தேரர்

மாஸ்கோ, ஜூன் 21

ரஷ்யாவில் பல இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர். ஆனால் அவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கும், தேசிய ஒற்றுமைக்கும் பங்கம் விளைவிக்காதவாறு இணைந்து ஐக்கியமாக வாழ்ந்து வருகின்றனர்.

ரஷ்யாவில் சமயச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள வண. திம்பிரிவேவ சுமணசார தேரர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சோவியத் நல்லுறவு சங்கத்தின் அழைப்பை ஏற்று ரஷ்யா வந்திருக்கும் புத்த பிக்குகளின் குழுவில் வண. திம்பிரிவேவ சுமணசார தேரர், வண. கரந்தெனிய விமலதொட்ட மகா தேரர், வண. பள்ளேகந்த ரத்னசார தேரர் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

இக்குழுவினர் ரஷ்யத் தலைநகரில் அமைந்திருக்கும் பௌத்த மத வழிபாட்டுத் தலங்களுக்கும், பல்வேறு புனித தலங்களுக்கும் விஜயம் செய்கின்றனர்.

இலங்கை — சோவியத் நல்லுறவு சங்கத்தின் முக்கிய தலைவர்களின் கூட்டம் ஒன்றில் உரையாற்றிய வண. சுமணசார தேரர் குறிப்பிட்டதாவது:—


ரஷ்யாவில் வாழும் பல்வேறு இன மக்கள் எவ்வித மசாந்த விருப்பு வெறுப்புகளுக்கும் இடமளிக்காமல், குரோத மனப்பான்மையின்றி பரந்த சோசலிஸ பொருளாதார கொள்கையை கடைப்பிடிக்கின்றனர். நாட்டின் நலனில் அக்கறை கொண்டவர்களாக காணப்படுகின்றனர்.

காலஞ்சென்ற பிரதமர் திரு. எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் அடிச்சுவட்டின் கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக சோவியத் — இலங்கை நல்லுறவை பேணிப் பாதுகாத்து வந்துள்ளோம்.

ரஷ்யா கடைப்பிடிக்கும் வெளிநாட்டுக் கொள்கை பலராலும் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டியதாகும். ஆனால் ஒரு சில அரசியல் எதிரிகள் ரஷ்யாவின் வெளிநாட்டுக் கொள்கையை தவறாகப் பிரசாரம் செய்கின்றனர். இது கண்டிக்கப்பட வேண்டியது.

— இப்படி வண. சுமணசார தேரர் கூறினார்.

இலங்கை — சோவியத் நல்லுறவு சங்கத்தின் உபதலைவரும், ரஷ்யாவின் முதலாவது இலங்கைத் தூதுவருமான திரு. வொல்டிமார் யக்குவேல்வ்ஷி உரை நிகழ்த்தினர். (ப—வ)



ராஜகிரியாவில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான விடுதி ஒன்று கட்டப்பட இருக்கிறது. திரு. நெவில் சமரக்கோன் (வலது) திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கியூஸி, சட்டமா ... கட்ட பொறுபேற்றிருக்கும் கட்டட கலைஞர்களின் பிரதிநிதியான திரு. பி. பி. ரம்புக்வெல ... காணப்படுகின்றனர்.

## தீர்வையற்ற கடைத் தொகுதியில் இந்திய பாஸ்போர்ட்டுடன் வாலிபர் கைதானர்

கொழும்பு, ஜூன் 22

தமிழ் நாட்டுப் பிரஜை ஒருவரின் இந்திய கடவுச் சீட்டில் புகைப்படத்தை அகற்றி விட்டு தனது புகைப்படத்தை அதில் ஒட்டி, தீர்வையற்ற கடைத்தொகுதியில் சுங்க அதிகாரிகளை ஏமாற்ற முனைந்தார் என்று கூறப்படும் வாலிபர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கோட்டை நீதிவான் ஜனப் எஸ். ஐ. இமாம் முன்னிலையில் புதனன்று அவர் ஆஜர் செய்யப்பட்டார்.

இந்த நபர் போலிப் பாஸ்போர்ட்டுடன் போலி ரூபா நோட்டுக்களையும் கைவசம் வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இலங்கை சுங்க அதிகாரிகள் கொள்ளுப்பிட்டியிலுள்ள தீர்வையற்ற கடைத்தொகுதியில் கடந்த 16 ஆம் திகதி நடத்திய திடீர் பரிசோதனையின் போதே மேற்படி நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபர் பேலியாகொடையைச் சேர்ந்தவர், பெயர் கிருபாகரன் ரவீந்திரன்.

சந்தேக நபர் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

தண்டனை வழங்குவதை எதிர்வரும் ஜூலை 5 ஆம் திகதிக்கு ஒத்திவைத்த நீதிவான் சந்தேக நபரை 7 ஆயிரத்து 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். (ப–11)

## கண்நோய் பரவுகிறது

கொழும்பு, ஜூன் 22

கொழும்பிலும் அதன் சுற்றுப் புறத்திலும் கண்நோய் மிக தீவிரமாக பரவி வருகிறது.

"கண்ஜன்டிவயிட்ஸ்" என கூறப்படும் இக் கண் நோய் மிக விரைவில் பரவக்கூடியது. இந் நோயினால் பாதிக்கப்பட்ட 300க்கு மேற்பட்ட நோயாளர்கள் தற்போது கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ப–ர)

ராஜகிரியாவில் சட்டக்கல்லூரி மாணவர்களுக்கான விடுதி ஒன்று கட்டப்பட இருக்கிறது. பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் இதற்கான அடிக்கல்லை நட்டார்.

படத்தில் பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோன் (வலது) திரு. எச். டபிள்யூ. ஜெயவர்த்தன கியூஸி, சட்டமா அதிபர் திரு. சிவா பசுபதி, வழக்கறிஞர் சங்கத் தலைவர் திரு. ஹோர்மன் ஜே. சி. பெரேரா ஆகியோரும், இக்கட்டடத்தை கட்ட பொறுபேற்றிருக்கும் கட்டட கலைஞர்களின் பிரதிநிதியான திரு. பி. பி. ரம்புக்வெலவும் காணப்படுகின்றனர்.

சட்டக் கல்லூரி விடுதியின் மாதிரி அமைப்பை இவர்கள் பார்வையிடும் காட்சி. (த-ச)

செய்யப்பட்டார்.

இந்த நபர் போலிப் பாஸ்போர்ட்டுடன் போலி ரூபா நோட்டுக்களையும் கைவசம்

ஒத்திவைத்த நீதிவான் சந்தேக நபரை 7 ஆயிரத்து 500 ரூபா பிணையில் செல்ல அனுமதித்தார். (ப-11)

நோயாளர்கள் தற்போது கொழும்பு கண் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (ப-ர)

உறவு சங்கத்தின் உபதலைவரும், ரஷ்யாவின் முதலாவது இலங்கைத் தூதுவருமான திரு. வொல்டிமார் யக்குவேல்ஸ்வி உரை நிகழ்த்தினர். (ப-வ)

# அமெ. இராணுவ உதவி கோரவில்லை

## உதவிகள் தாமாகக் கிடைத்தால் ஏற்போம் என்கிறார் ஜனாதிபதி

வாஷிங்டன், ஜூன் 21

அமெரிக்கா விடமிருந்து எவ்வித இராணுவ உதவியையும் தாம் கோரவில்லை என்று ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

"எங்களின் சொந்தக் காலிலே நாம் நிற்கவேண்டும். எங்களை நாங்களே பாதுகாக்க வேண்டும். பிறர் இதில் தலையிட முடியாது. உதவிகள் தாமாகக் கிடைத்தால் அவற்றை ஏற்போம்" என்றும் அவர் கூறினர்.

பஞ்சாப் நிலைமைபற்றி அவரின் கருத்தைக் கேட்டபோது, "அந்த மாநில நெருக்கடி காரணமாக இந்தியா துண்டாடப்படும் என நான் நினைக்கவில்லை. இந்தியா ஒன்றுபட்டு இருக்காவிட்டால், அது முழு உலகின் உறுதிப்பாட்டை சீர்குலைக்கும்" என அவர் பதிலளித்தார்.

பாகிஸ்தான், வங்காள தேசம், மலேஷியா, சோவியத் ரஷ்யா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்யும்படி அழைப்புகள் கிடைத்துள்ளன. ஆனல் இந்நாடுகளுக்கு விஜயம் செய்யும் திகதிகள் பற்றி இன்னும் முடிவு செய்யவில்லை என்றும் திரு. ஜெயவர்த்தன தெரிவித்தார். (க)

# மாணவர் மர...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்கு உரை நிகழ்த்கினர்.

அப்பொழுது அவர் தெரிவித்ததாவது:

மாணவரின் மரணம் குறித்து பாரபட்சமற்ற நீதி மன்ற விசாரணை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதன் பின்னர் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். இவ் விசயத்தில் அரசாங்கம் பாரபட்சமற்ற ஒரு முடிவை எடுக்கும்.

பேராதனை சம்பவம் குறித்து அரசாங்கம் ஆழ்ந்த கவலை கொண்டிருக்கிறது. இறந்த மாணவரின் குடும்பத்தவருக்கு சாத்தியமான எல்லா உதவிகளும் வழங்கப்படும்.

இந்தச் சம்பவத்தின் பின்னர் கொழும்பிலும், ஏனைய பல்கலைக்கழகங்களிலும் வன் செயல்களை தூண்டிவிட சில தீவிரவாத குழுக்கள் முயற்சிக்கின்றன.

கொழும்பில் மோட்டார் வாகனம் ஒன்று புதனன்று தீக்கிரையாக்கப்பட்டது.

எந்த விதமான வன்செயல்களுக்கும் இடம் அளிக்காது அரசாங்கம் கடும் நடவடிக்கை எடுக்கும்.

அசம்பாவித சம்பவங்களை அடுத்து பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டிருக்கின்றன. நிலைமை சீரானதும் கூடிய விரைவில் பல்கலைக்கழகங்கள் மீண்டும் திறக்கப்படும்.

பல்கலைக்கழக பரீட்சைகள் விரைவில் நடைபெற இருக்கின்றன. இந்த நிலையில் பல்கலைக்கழகங்களை மூட நேர்ந்ததையிட்டு நான் கவலை அடைகிறேன்.

அதேவேளை பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகள் தகாத வழியில் செல்லாதவாறு பார்த்துக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கிறேன்.

இந்தச் சம்பவங்களின் பின்னணியில் இருந்து செயல்படுவோர் குறித்து விசாரணை நடத்தப்படும்.

வட பகுதியில் பயங்கர வாதத்தை முறியடிப்பதற்கு இராணுவம் அனுப்பப்பட்டிருக்கிறது. தென் பகுதியில் கலவரங்களை தூண்டினால் அங்கிருந்து இராணுவத்தை தென் பகுதிக்கு திருப்பி அழைக்க நேரும். இதன் மூலம் வடபகுதி பயங்கரவாதிகளின் எண்ணங்கள் நிறைவேறும்.

இன்றைய நெருக்கடி நிறைந்த சந்தர்ப்பத்தில் நாட்டில் சட்டத்தையும், அமைதியையும் பாதுகாக்க புத்திசாலித்தனமாக மக்கள் அரசாங்கத்திற்கு முழு ஆதரவு வழங்க வேண்டும்.

இப்படி அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலி வேண்டுகோள் விடுத்தார். (ப-மு)

## கடத்தப்பட்டார்

கொழும்பு, ஜூன் 22

தமது கணவருடன் போசன் வைபவங்களை பார்க்கச் சென்று வீடு திரும்பிய இளம் மனைவி கடத்தப்பட்டார்.

இச்சம்பவம் கண்டி மாவட்டத்தைச் சேர்ந்த வத்தேகம என்ற இடத்தில் நிகழ்ந்திருக்கிறது.

அண்மையில் திருமணம் முடித்த இந்தத் தம்பதியர் பொசன் வைபவங்களை பார்வையிடுவதற்காக நகருக்குச் சென்று விட்டு, வீடு திரும்புவதற்கு பஸ்ஸுக்காக காத்திருந்தனர்.

நீண்ட நேரமாகியும் பஸ் வராததினல் நடந்து சென்றனர். சிறிது தூரம் சென்றதும் மோட்டார் காரில் வந்த இனம் தெரியாத கோஷ்டியினர், மேற்படி இளம் மனைவியை கடத்திக் கொண்டு தலைமறைவாகி விட்டனர்.

இதனை அடுத்து, கணவர் வத்தேகமை பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

வத்தேகம பொலீஸார் கடத்தல்காரர்களை தேடும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். (ப-11)




இனபதியிலும், சிந்தாமணியிலும் (மூலம் குறிப்பிடாது) பிரசுரிக்கப்படும் வெளிநாட்டுச் செய்திகள் அனைத்தும் பி. பி. சி., அ. இ. வா., டி. பி. ஏ. என். எஸ்.-வெ தூ.நி. ஆகியவற்றிலிருந்து கிடைப்பனவாகும்.

இப்பத்திரிகையை அச்சிட்டுவெளியிட்டவர் சுயாதீனப் பத்திரிகா சமாஜம், 5, குணசேனமாவத்தை, கொழும்பு — 12, (இலங்கை) தபால்பெட்டி 1613. வெளியிட்ட திகதி 22 ஜூன் 1984

Dinapathi, 5, Gunasena Mawatha, Colombo 1 2 P. O. Box 1613.